# மேற்கே செல்லும் விமானம்

காதல் காவியம்



எழுத்து - *மோகன் கிருட்டிணமூர்த்தி*
[maakimo@gmail.com](mailto:maakimo@gmail.com)

© காப்புரிமை மோகன் கிருட்டிணமூர்த்தி, 2006. இந்த படைப்பை ஆசிரியரின் அனுமதியின்றி அச்சடிக்கவோ பிரசுரிக்கவோ சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது
© Mohan Krishnamurthy, 2006. Printing and Publishing without author’s explicit permission is prohibited by law.

# மேற்கே செல்லும் விமானம்
**1**

ராஜகோபால் வானத்தில் மிதந்து கொண்டிருந்தான். அமெரிக்காவின் தலைசிறந்த மென்பொருள் நிறுவனம் அவனுக்கு நேர்முக தேர்வுக்கானஅழைப்பு விடுத்திருந்தது. அந்த நிறுவனத்தின் தேர்வுக்குழு அடுத்த வாரம்சென்னைக்கு வருகிறார்கள். அவனுடைய விண்ணப்பத்தை ஏற்றுஅவர்கள் முதலிலேயே தொலைபேசி மூலம் பேட்டி எடுத்து அவனை
முதல் சுற்று தேர்வு செய்துவிட்டனர். அவனுடைய பட்டம் பட்டயங்கள் வேலை அனுபவம் என்று அவர்களுக்கு அனைத்தும் பிடித்திருந்தது.

நேர்முக தேர்வில் வென்றுவிட்டால் பிறகு அமெரிக்க பயணம் தான். ஆஹா அமெரிக்கா! கனவுகளின் தேசம். பிச்சைக்காரரும் பணக்காரன் ஆகலாம் திறமை இருந்தால். 'பூவோ இது வாசம். போவோம் இனி காதல் தேசம்" என்று இளையாராஜா பாட்டு அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

சென்னையில் பணிபுரிந்தாலும் வாரம் ஒரு முறை தந்தை தாயை பார்க்க விழுப்புரம் வந்துவிடுவான். இந்த செய்தி வந்தபோதும் விழுப்புரத்தில் தான் இருந்தான். அவன் நண்பன் முரளி தொலைபேசி மூலம் இந்த விஷயத்தை கூறினான்.

அப்பா அம்மாவிடம் விவரத்தை கூறியதும் அவன் அம்மா பூஜையறைக்கு சென்று குங்குமம் கொண்டு வந்து நெற்றியில் இட்டாள். அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்த அவன் தந்தைக்கு அவன் வாழ்வில் நடக்கும் அனைத்து

விஷயங்களிலும் நாட்டம் அதிகம். உடனே செய்தி தாள் எடுத்து 'ஒரு டாலரின் மதிப்பு இன்னிக்கு 45 ரூபாய்" என்றார். உள்ளே சென்று பழைய பெட்டிகளை உருட்டி பிரட்டி அவன் எப்போதோ பயன்படுத்திய உலக வரைப்படத்தை எடுத்து வந்து வட அமெரிக்கா பக்கத்தை புரட்டி 'எந்த ஊர்ல இருப்பே நீ" என்ற
கேட்டார். ராஜகோபாலும் ஆர்வத்துடன் 'ஈஸ்ட் கோஸ்ட் பா. நியூ ஜெர்ஸியில்". என்றான்.
உடனே அவர் இன்னும் சில பக்கங்களை புரட்டிவிட்டு 'அப்பா குளிர்அதிகமாக இருக்கும் போலிருக்கே. நீ மறக்காம கம்பளி ஸ்வெட்டர்எல்லாம் எடுத்திட்டுப்போ" என்றார்.

'அப்பா இன்னும் நேரம் இருக்குப்பா அதுக்கெல்லாம்" என்றுவிட்டு தன்னுடைய கைநெடிக் ஹோண்டாவை எடுத்துக் கொண்டு வெளியேசென்றான்.

காந்தி சாலையில் வழக்கமாக செல்லும் தேனீர் விடுதிக்கு முன் வண்டியை நிறுத்தினான். அங்கே கிருஷ்ணன் ராஜு பாலா என்று அவன் நண்பர்கள் கூட்டம் காத்திருந்தது. கிருஷ்ணனும் ராஜுவும் சென்னையில் ஒரு கால் சென்டரில் பணிபுரிகிறார்கள். அவர்களும் ராஜகோபாலைப் போல மாதம் ஒரு முறையோ முடிந்தால் வாராவாராமோ வந்து விடுவார்கள். பாலா விழுப்புரத்திலேயே ஒரு கொரியர் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறான். சுமார் 15 வருட நட்பு இவர்களுடையது.

'என்னடா மச்சான் இன்னிக்கு உன் ட்ரீட் தான்" என்றார்கள் குதுகலத்துடன். பிறகு பல மணிநேரம் அவர்களுடன் அமெரிக்கா பற்றி வாத விவாதங்கள். வீட்டிற்கு வரும்போது இரவு 12 மணி.

**2**

தட் தட் என்று சத்தம்கேட்டதும் திடுக்கென்று எழுந்தான் ராஜகோபால். இப்போது நடந்தது போல இருந்த இந்த நினைவுகள் ஈஸ்ட் ப்ரன்ஸ்விக் நியூ ஜெர்ஸியில் தற்போது இருக்கும் இவனை வந்து தொந்தரவு செய்வதுண்டு.

அவனுடைய அமெரிக்க நண்பனும் உடன் பணிபுரிபவனுமான க்ரிஸ் தான் கதவை தட்டியது.

'கமான் மேன் வி நீட் டு கோ" என்றான் அவசரமாக.

ஞாயிற்றுக்கிழமை மதியம் இப்படி தூங்குவது உண்டு.
'கிவ் மி 2 மினிட்ஸ"; என்று அவனிடம் கூறிவிட்டு குளியலறைக்கு சென்று ஒரு அவசர குளியல் போட்டுவிட்டு ஓடிச்சென்று அலமாரியில்
வைத்திருந்த மாரியம்மனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு குங்குமத்தை எடுத்து சற்றே நெற்றியில் வைத்துவிட்டு பிறகு அதை அழித்துவிட்டு ஜீன்ஸ் அணிந்துக் கொண்டு கருப்பு நிற குளிருக்கான ஜாக்கெட் எடுத்து அணிந்து வெளியே வந்தான்.

க்ரிஸ் ஆர்வமாக 'அலமாரியை நோக்கி என்ன செய்தாய்?" என்று கேட்டான்.

ராஜகோபால் அவனிடம் அது விழுப்புரத்தின் செல்லியம்மன் படம் என்றும் அந்த மாரியம்மன் எவ்வளவு சக்திவாய்ந்த தெய்வம் என்றும் சிறிய
வயதிலிருந்தே அவன் வேண்டியது அனைத்தும் அந்த அம்மா

தந்தவள் என்றும் விளக்கினான்.

21ம் நூற்றாண்டிலும் இன்னும் அங்கிமிங்குமாக ஒட்டிக்கொண்டிருக்கும் இறை நம்பிக்கையும் கூட இல்லாத இளைஞர் சமுதாயம் அமெரிக்காவில்.

கிண்டல் பார்வை இல்லாவிட்டாலும் சற்றும் அவனை நம்பாதது போல் ஒரு பார்வை பார்த்தான் க்ரிஸ்.

'இநதியர்களின் பழக்க வழக்கங்கள் வியக்கதத்க்கது. நீ ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர். நீயுமா இதையெல்லாம் நம்புகிறாய்?" - க்ரிஸ்.

'க்ரிஸ். இது ஒரு சிக்கலான விஷயம். பல விஷயங்கள் இந்தியாவில் பொது அறிவுடனோ தர்க்க சாஸ்திரப்படியோ நடப்பதில்லை. அங்கு ஒரு குழந்தை பிறந்த முதலிருந்து அவனுடைய சமுதாயம் பல விஷயங்களை அவனுக்கு கற்றுத்தருகிறது.

அவனுடைய விருப்பமோ இல்லையோ பல செய்திகள் அவனுடைய இளம் நெஞ்சில் பதிந்துவிடுகின்றன். சில சமயம் அவனுடைய வளர்ச்சிக்கு ஏற்ப்ப சில பழக்கங்களும் நம்பிக்கைகளும் மாறிவிடும். சில மாறாமல் அவனுடன் நின்றுவிடும்".

'பிறகு குங்குமம் வைத்துவிட்டு ஏன் அழித்துவிட்டாய்? யாராவது அதை பார்த்து சிரிப்பார்கள் என்றா?"

'இல்லை க்ரிஸ். இந்து மதம் மிகவும் சகிப்புத்தன்மை வாய்ந்த மதம். வேறு ஒரு மதத்தை அழித்தோ இல்லை பயத்தாலோ பணத்தாலே

மதம் மாற்றியதாலோ இந்து மதம் உருவாகவில்லை. இந்தியா எந்த நாட்டின் மீதும்
இதுவரை படை எடுத்ததில்லை. ஆனாலும் இந்தியாவின் மீது பல நாடுகள் படை எடுத்திருக்கின்றன.

பயம் பணம் கொடுங்கோல் ஆட்சி இவை மூலம் இந்தியாவில் பல முறை மத மாற்றம் நடந்தாலும் இன்னும் 80 சதவிகிதம் இந்தியாவில் இந்து மதம் தான். ஆனாலும் மதப்பற்றை வெளிப்படையாக காட்டிக் கொள்ள வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

அதே சமயம் நான் வேறு ஒரு நாட்டில் இருக்கும் போது அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப ஒரு சில சரிப்பாடுகள் செய்யவேண்டியது தான் நியாயம்".

'அப்பா எது கேட்டாலும் பெரிய சொற்பொழிவு ஆற்றிவிடுகிறாயே?" என்று சிரித்தான் க்ரிஸ்.

ராஜகோபால் மீண்டும் பழைய நினைவுகளுக்கு திரும்பினான். அவன் அதிலிருந்து மீண்ட போது ஒரு மதுவிடுதியில் வண்டி நின்றிருந்தது.

'கமான் இன்' என்று அழைத்தான் க்ரிஸ். உள்ளே நுழைந்ததும் ஒரு புது உலகத்தை கண்டான். டெக்ஸாஸ் எனும் மாகாணத்தில் வாழ்பவர்கள்

போல உடை அணிந்திருந்த பணி பெண்கள் ஆண்கள். குதிரைப்படங்கள் துப்பாக்கிகள் என்று ஒரு 18ம் ஆண்டு கிராம விடுதியை அப்படியே சித்தரித்திருந்தார்கள்.

'மீட் சிலியா" என்று திடீரென்று ஒரு பெண்ணை அறிமுகப்படுத்தினான் க்ரிஸ். ஒரு நிமிடம் கண் மூடி கண் திறந்தான் ராஜ். சின்டெரல்லா கதையை கேட்டிருக்கிறான். ஸ்நோ வொயிட் கதையை கேட்டிருக்கிறான்.

ஆனால் வானத்து தேவதைகள் தமிழ் படத்திலும் கூட சுமாராகத்தான் இருப்பார்கள். இவளோ ரம்பை ஊர்வசி என்ற அவனே பார்த்திராத ஒரு கற்பனை கதாபாத்திரத்துடன் ஒப்பிட்டு வியந்தான்.

நீலமான கண்கள் (ஓ அமெரிக்காவில் அனைவரும் கான்டாக்ட் லென்ஸ் அணிவார்களே) நீளமான கூந்தல் பொன் நிறத்தில் (இங்கே எல்லாரும் டை தான்) உதடுகளோ சிவந்த நிறம் (லிப்ஸ் டிக்காக இருக்குமோ) வி போன்ற ஸ்வெட்டர் சிவப்பு நிறத்தில் நீல நிறத்தில் ஒரு ஜீன்ஸ் வெள்ளை நிறத்தில் ஒரு ஹை ஹீல்ஸ். 'ஹாய்' என்று கை நீட்டியது அந்த தேவதை.

இவனோ நிஜமா நிழலா என்று தெரியாமல் எங்கோ கை நீட்டினான். அவள் அவன் கையை தேடி தன்னுடைய மென்மையான கைகளால் கை குலுக்கினாள். மயிலிறகு அவனை வருடிச் சென்றது போல் இருந்தது.

அவர்கள் மூவரும் உயரமான மூன்று முக்காலிகள் மேல் அமர்ந்தனர். ஒரு பணிப்பெண் அவர்களிடம் வந்து 'மே ஐ கெட் சம் டிரிங்ஸ் ஃபார் யூ" என்று கேட்டாள்.

'ஒன் ஹெனிக்கன் ப்ளீஸ்" - க்ரிஸ்.

'ஐ வில் கோ வித் ஹிம் " - சிலியா.

அவள் மேல் வைத்திருந்த கண்ணை அகற்றாமல் 'ஒன் டையட் கோக் ப்ளீஸ்" என்றான்.

'வாட்? யூ வில் நாட் கோ ஃபார் ஹெனிக்கன்? யூ வான்ட் டு ட்ரை சம்திங் ஹார்ட்?" என்றான் க்ரிஸ் ஆச்சர்யத்துடன்.

'இல்லை க்ரிஸ் எனக்கு குடி பழக்கம் இல்லை". (*டேய் ராஜு நீ அமெரிக்கா போய் குடிக்கிற பழக்கம் மாமிசம் சாப்பிடற பழக்கம் எல்லாம் கொண்டு வருவதா இருந்தா நீ இங்கிருந்தே வேலை செஞ்சா போதும்டா" - அம்மா என் மேல நம்பிக்கை இல்லையா உனக்கு*")

என்ன? குடிக்க மாட்டாயா? என்ன கதையாக இருக்கிறது? கல்லூரியில் படித்திருக்கிறாய். கம்யூட்டர் துறையில் பணிபுரிகிறாய். குடிப்பதில்லை என்றால் எப்படி நம்புவது? - க்ரிஸ்.

ஆஹா. க்ரிஸ் இதற்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தால் உன்னுடைய விருந்து வைபவம் கெட்டுப்போயிடும். பிறகு சொல்கிறேன். அதுவரை ஏதோ ஒரு இந்திய நண்பனை அழைத்து வந்திருக்கிறான் என்று நினைத்த சிலியா அவன் மீது ஆர்வமானாள்.

5.11 அடி. 70 கிலோ. தினம் ஓடி உடலை கச்சிதமாக வைத்திருந்தான். சிறிய வயதிலிருந்து தந்தை சொல்லி வளர்த்த பழக்கம். அவன் தந்தை இந்த அரசாங்க உத்தியோகத்திற்கு முன்பு பட்டாளத்தில் இருந்தவர்.

அமைதியான முகம். கருப்பு தான். துரு துரு கண்கள். உண்மையே

பேசுவதாலும் ஏதையும் சுலபமாக எடுத்துக் கொள்வதாலும் முகத்தில் எந்த வித சுருக்கங்களும் இல்லை. கருப்பாக இருந்தாலும் களையாக இருக்கிறான் என்று சிலியா நினைத்தாள்.

க்ரிஸை நோக்கி 'அவனுக்கு வேண்டாம் என்றால் கட்டாயப்படுத்தாதே. எனக்கு சில இந்தியர்களை தெரியும். அவர்கள் குடிப்பதே இல்லை".

தோளை குலுக்கி ஓகே என்றான் க்ரிஸ். அவனுக்கு ராஜ் எது செய்தாலும் ஆச்சர்யமாகவே இருந்தது.

என்னை புரிந்து கொண்டதற்கு நன்றி சிலியா என்றான் ராஜ்.
ஏ அது ஒரு பெரிய விஷயமே இல்லை என்றாள் அவள் அழகாக சிரித்தப்படியே.

பிறகு பல மணி நேரம் அமெரிக்க இந்திய வாழ்கை முறையிலிருந்து இன்றைய ஈராக் ஈரான் பிரச்சனை வரை அனைத்தும் பேசினார்கள். ராஜ் இரண்டு கோக்கில் நின்றுவிட்டான். எப்படித்தான் இந்த கருமத்தை லிட்டர்
கணக்காக இவர்கள் குடிக்கிறார்கள்? நம்ம ஊரிலும் இந்த சனியன் வந்துவிட்டது என்று கோக் பெப்ஸிகளை வைதான் மனதுக்குள்ளே.

சுமார் 12 மணிக்கு க்ரிஸ் தன்னுடைய கார் சாவியை எடுத்து ராஜிடம் நீட்டினான். 'ப்ளீஸ் ட்ராப் அஸ்". குடித்துவிட்டு ஓட்டினால் நியூ ஜெர்ஸியில் ஜெயில் தான்.

'நாட் அ ப்ராப்ளம்". என்று கார் நிறுத்தியிருந்த இடத்திருக்கு மூவரும் சென்றார்கள்.

க்ரிஸ் பின்னால் அமர்ந்துக்கொள்ள ஓட்டுனராக ராஜ் அவன் அருகில் சிலியா அமர்ந்து கொண்டாள்.

தான் அளவுக்கும் அதிகமாக உணர்ச்சிவசப்படுவதாக தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

முதலில் க்ரிஸை அவன் வீட்டில் விட்டுவிடு ராஜ். பிறகு என்னை என்றாள் சிலியா.

மெதுவாக வண்டியை எடுத்து ரூட் 18 பிடித்து சில மைல் ஓட்டிய பிறகு ரூட் 1 பிடித்து ஓமேகா டைனர் எனும் ரோட்டோர விடுதியிலிருந்து வலப்புறம் திருப்பி நார்த் ஒக்ஸ் எனும் குடியிருப்பில் வண்டியை நிறுத்தினான்.

க்ரிஸ் உன் வீடு வந்துவிட்டது. இறங்கு என்றான்.
நன்றி ராஜ். நாளைக்கு காலை அலுவலகத்திற்கு அழைத்துப் போக நீதான் வரவேண்டும் ப்ளீஸ் என்றான் க்ரிஸ்.

ஒன்றும் பிரச்சினையில்லை. நல்லா தூங்கு என்று சொல்லி அங்கிருநது விலகினான்.

# 3

உன்னை எங்கே டிராப் பண்ணனும் சிலியா? என்று அவளைப் பார்த்து கேட்டான்.

வெல். நான் வழி சொல்றேன். நீ மறுபடியும் ரூட் 18க்கே போ. என்றாள்.

உன்னைப்பற்றி கொஞ்சம் சொல்லேன் என்றான் ராஜ்.
என்னைப்பற்றி என்ன சொல்ல? நான் 13 வயதிருக்கும் போதே என் தந்தை வேறு ஒரு பெண்மணியை மணந்துக் கொண்டு போய்விட்டார். அப்போதிலிருந்து நான் வாரம் ஒரு முறை தான் அவரை பார்க்க முடிகிறது. கடந்த சில வருடங்களாக அதுவும் இல்லை.

என் தாயும் சில வருடங்களுக்கு பிறகு வேறு ஒருவரை திருமணம் செய்துக் கொண்டார். 18 வயது வரை அந்த வீட்டில் நான் இருந்ததே ஒரு பெரிய சாதனை தான். பிறகு பகுதி நேர வேலை செய்து கொண்டே பட்டப் படிப்பை முடித்தேன்.

இப்போது தனியாகத்தான் இருக்கிறேன். தந்தை தாயுடன் சேர்ந்திருந்த நாட்கள் அடிக்கடி நினைவுக்கு வந்து போவதுண்டு. ஆனால் அமெரிக்காவில் பெரும்பால குடும்பத்தில் இந்த கதையை பார்க்கலாம். நீங்கள் இந்தியர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

என்னுடைய தோழியின் தந்தை 50 வயது ஆனவர் அவர் இன்னும் அவருடைய தாய் தந்தையுடன் இருப்பதாக கூறினாள். சில சமயம் இந்தியனாய் பிறந்திருக்கலாமோ என்று நினைப்பதுண்டு. அவள்

குரல் நெகிழ்ந்திருந்தது.

அவள் தன் பையிலிருந்து மார்ல்பரோ அல்ட்ரா லைட்ஸ் எடுத்து பற்ற வைக்க முயன்றாள். சட்டென்று நிறத்தி 'ராஜ் நீ சிகரெட் குடிப்பியா?" என்றாள்.

என்ன விளையாடுகிறாயா? என் அம்மா என்னை கொன்றே விடுவாள் என்றான் சிரித்தப்படியே.

ஆ. இப்போது உன் அம்மா உன் அருகில் இல்லையே! என்றாள்.

சத்தியத்தை காப்பாற்ற வேண்டும் என்றால் யாரும் முன்னே இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை என்றான்.

அமேஸிங். உன்னை பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது. அதே சமயம் மிகவும் நன்றாக இருக்கிறது. நான் பல இந்திய குடும்பங்களை பார்க்கும் போது ஏன் அமெரிக்காவில் இந்த கலாச்சாரம் இல்லை என்று வருந்துவதுண்டு.

அவள் சிகரெட்டை எடுத்து உள்ளே வைத்தாள.

ஹேய் நான் பிடிக்க மாட்டேன் என்று சொன்னேனே தவிர நீ பிடிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. பரவாயில்லை. பிறகு என்று விட்டு அமைதியானாள்.

சட்டென்று அவள் 'ராஜ் உன் ரூமை எனக்கு காண்பிக்க மாட்டாயா?' என்றாள்.

அவனுக்கோ தூக்கமாக இருந்தது. இருந்தாலும் அவளுடன்

இருப்பது ஆறுதலாக இருந்தது. நாளை வேறு க்ரிஸை அழைக்க செல்ல வேண்டும். அலுவலகம் வேறு போகவேண்டும். கடிகாரத்தை பார்த்தான். 1 மணி ஆகியிருந்தது.

அவன் கடிகாரத்தை பார்த்ததை கவனித்த சிலியா உனக்கு நேரமாகிவிட்ட தென்றால் பிறகு ஒரு நாள் என்றாள்.

இல்லை பரவாயில்லை என்று விட்டு ஒரு ஆல் டேர்ன் எடுத்து எக்கர்ஸ் தெருவை கடந்து டைலர் அவன்யூவில் வண்டியை நிறத்தினான்.

ப்ளீஸ் வா சிலியா. இது தான் என்னுடைய குடிசை என்றான். சில நிமிடங்கள் கண்களால் நோட்டம் விட்டவள் 'வாவ்" என்று விட்டு சோபாவில் அமர்ந்தாள். உட்கார்ந்த உடனே அவள் கண்ணுக்கு பட்டது 'ஹூஸ் அவுட் சைட்" என்று அறிவிப்பு தான்.

ஐயாம் ஸோ ஸாரி என்று சொல்லிவிட்டு வெளியே வைத்திருந்து காலணி பெட்டியில் தன் ஹை ஹீல்ஸை விட்டு அழகான வெள்ளை கால்களுடன் மெத்தென்று உள்ளே நுழைந்து மறுபடியும் சோபாவில் அமர்ந்துக் கொண்டாள்.

பையிலிருந்து மீண்டும் புகைப்பெட்டியை எடுத்தவள் 'நோ ஸ்மோக்கிங்" எனும் இன்னொரு அறிவிப்பை பார்த்துவிட்டு சலித்தப்படியே உள்ளே வைத்தாள். இது என்ன வீடா இல்லை பள்ளிக்கூடமா என்று வியந்தாள்.

எளிமையான அறை. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகான விளக்குகள். ஒரு பெரிய விவேகானந்தர் படம். ஒரு புத்தக

அலமாரி. பல புத்தகங்கள். அகராதிகள். ஆங்கிலம் ஸ்பானிஷ் ப்ரென்ச் என்று மொழி கற்கும் புத்தகங்கள். யோகா புத்தகங்கள்.

உன் வீட்டை சுற்றிப்பார்க்கலாமா என்று கேட்டுக் கொண்டே வலப்புறம் இருந்த படுக்கையறைக்குள் நுழைந்தாள். அசந்து போனாள். ஒரு திருமணமாகாதவனின் வீட்டிற்கு வந்த சுவடே இல்லை. எல்லாம் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தது. துணிமணிகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. படுக்கை அருகே பகவத் கீதை புத்தகம். ஒரு வானொலி பெட்டி. ஒரு குறிப்பேடு. ஒரு பேனா.

உன் வீடு மிகவும் எளிமையாகவும் நன்றாகவும் இருக்கிறது என்றாள்.

நன்றி. என்ன குடிக்கிறாய் நீ?

எதுவும் வேண்டாம். இன்னும் பீயர் வயிற்றிலேயே இருக்கிறது என்றாள்.

பிறகு ஏதாவது சாப்பிட இருக்கிறதா என்று கேட்டாள்.

சிலியா நான் சைவம். உனக்கு அரிசி ரொட்டியை தவிர வேறு எதுவும் கிடைக்காது என்றான் சிரித்தபடியே.

எது இருந்தாலும் பரவாயில்லை. கொடு என்றாள்.

குழந்தை போல இருந்த அவளை பார்த்து ரசித்துக் கொண்டே ரொட்டியை சுட வைத்தான்.

அவள் தன்னுடைய கைத்தொலைபேசியை எடுத்து யாரிடமோ பேசினாள். பிறகு மெதுவாக சமையலறைக்குள் நுழைந்து அவன் பின்னால் நின்றுக் கொண்டே 'ராஜ் ஒரு சின்ன் பிரச்சனை.

என்னுடைய தோழி இன்னும் வீடு வரவில்லை. நானும் வீட்டுச் சாவி எடுத்துவரவில்லை. உனக்கு பிரச்சனை இல்லையென்றால் நான் இன்று இரவு மட்டும் இங்கு தங்கலாமா?" என்றாள்.

ஓ. ஒன்றும் பிரச்சனை இல்லை. இந்த வீடு இரண்டு படுக்கையறை கொண்டது. நீ முதலில் சாப்பிடு என்றான்.

அவள் தன்னுடைய ஸ்வெட்டரை தலைக்கு மேலாக கழற்றி சோபாவின் மேல் வைத்தாள். அவளுடைய உடல் கட்டு இன்னும் நன்றாக தெரிந்தது.

அவன் ஆர்வமானான்.

எதிர்புறத்தில் உள்ள நாற்காலியில் அமர்ந்துக் கொண்டே தொலைகாட்சி பெட்டியை துவக்கினான்.

அவள் தன்னுடைய சட்டையின் மேல இரண்டு பித்தான்களை தளர்த்திவிட்டு சட்டையை முழங்கை வரை சுருட்டிவிட்டு சாப்பிட துவங்கினாள்.

அவனுடைய கண்கள் தன் சட்டைக்குள் நுழைவதை கண்டு 'இன்று இரவு என்னிடம் வருவான் பார்" என்று தன்னிடமே சொல்லிக் கொணட்டாள்.

அமெரிக்க தொலைகாட்சிகள் மிகவும் தரங்கெட்ட நிலமையில்

இருக்கிறது. ஒரு நிகழ்ச்சியும் யாரையும் திட்டாமல் கேவலப்படுத்தாமல் இருக்காது. மதங்களையும் மனிதர்களும் நிறத்தையும் வைத்து தான் இவர்களுடைய நகைச்சுவை உணர்வே. இல்லாவிட்டால் அளவில்லாமல் காமக் கேளிக்கைள். அதை அணைத்து விட்டு அவளைப் பார்த்து 'சாப்பாடு எப்படி" என்று கேட்டான்.

இது கூட கிடைக்காவிட்டால் நான் இருக்கும் பசியில் உன்னையே சாப்பிட்டிருப்பேன் என்றாள சிரித்தப்படியே. அழகு தேவதை. அவளின் அழகு அரிதார அழகா என்று நாளை தெரிந்துவிடும் என்று நினைத்துக் கொண்டான்.

அவள் உண்டு முடித்ததும் அவளுடைய படுக்கை அறையை காண்பித்துவிட்டு விளக்குகள் அணைத்துவிட்டு தன் படுக்கை அறைக்கு செல்லும் அலமாரியில் இருந்த தெய்வங்களை வணங்கிவிட்டு உறங்கச் சென்றான்.

## 4

காலையில் 6 மணிக்கு அலார்ம் வைக்காமலேயே எழுந்தான். காலைக் கடன்களை முடித்துவிட்டு தேனீர் கலந்து அவள் கதவை தட்டிவிட்டு உள்ளே சென்றான். அவள் எழுந்தபாடு இல்லை. குழந்தை போல் அவள் உறங்குவதை பார்த்து ரசித்தான். முகத்தில் களை கொஞ்சமும் குறைய வில்லை. சாயம் போட்ட உதடுகள் இல்லை. இல்லையென்றால் 12 மணி நேரத்தில் எந்த சாயமும் கரைந்துவிடும். சுற்று முற்றும் பார்த்தான் கான்டாக் லென்ஸ் பெட்டிகள் தென்படவில்லை.

சிலியா என்றான் மெதுவாக அவளை எழுப்பு மனமில்லாமல். அவள் மெதுவாக கண்விழித்து பார்த்தாள். விடிந்திருந்தது. எழுந்து அமர்ந்து உடலை சிலிர்த்துக் கொண்டாள். இரவு அவன் வரவில்லை. வெகு நேரம் அவன் ஏதாவது காரணம் சொல்லி கதவை தட்டுவான் என்று காத்திருந்துவிட்டே அவள் தூங்கச் சென்றாள். இதுவே ஒரு அமெரிக்க நண்பனின் வீட்டில் தங்கயிருந்தால் என் படுக்கையிலிருந்து தான் அவன் எழுந்திருப்பான் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு எழுந்தாள்.

மெதுவாக புன்னகைத்துக் கொண்டே அவனிடமிருந்து தேனீர் கோப்பையை வாங்கிக் கொண்டாள்.

நீ தயாராகு. நானும் குளித்துவிட்டு தயாராகிறேன் என்று சொல்லிவிட்டு அவள் பதிலுக்கு காத்திராமல் தன் படுக்கையறையில் இருந்த குளியலறை நோக்கி சென்றான்.

அவளும் எழுந்து தயாரானாள். அழகான சுகந்தம் அவள் மூக்கை தொட்டது. தன் அறையை விட்டு வெளியே வந்தவள் ராஜ் இடுப்பில் ஒரு வெள்ளை உடையை உடுத்திக் கொண்டு கண் மூடி தியானத்தில் இருப்பதை பார்த்தாள். எதிரே ஒரு ஊதுவத்தி புகைந்து கொண்டிருந்தது.

மிகுந்த ஆர்வத்துடன் ஒரு முக்காலியை எடுத்து அவனுருகில் போட்டுக் கொண்டு அவனை உற்று கவனித்தாள். கட்டுக்கோப்பான உடல். மார்பின் குறுக்காக ஒரு வெள்ளை நூல். நெற்றியில் சிவப்பு பொட்டு. எதிரே சில தெய்வப்படங்கள். இவனைப் பற்றி நிறைய தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

சந்தியாவந்தனம் செய்துவிட்டு ஆதித்ய ஹ்ருதயம் ஸ்லோகம் சொல்லிவிட்டு ஹனுமான் சாலிஸா படித்துவிட்டு நமஸ்கரித்து எழுந்த ராஜ் சிலியா தன்னையே பார்ப்பதை பார்த்து "ஹே வாட் ஆர் யூ லுக்கிங் அட்" என்று கேட்டான்.

ராஜ் நீ செய்வதெல்லாம் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. நீ என்ன செய்தாய்?

இது சந்தியாவந்தனம். இதை மூன்று முறை ஒரு நாளைக்கு செய்ய வேண்டும். ஆனால் பெரும்பாலேனோர் இரண்டு முறை செய்கிறார்கள். பிறகு நான் சூரியனையும் ஹனுமானையும் வணங்கினேன்.

ஹனுமான்? தட் மங்கி காட் என்று கேட்டாள்.

ஆம். அவர் திருமணம் செய்துக் கொள்ளாமல் ராமருக்காக தன் வாழ்கையை அற்பணித்து கொண்டவர். திருமணமாகதவர்கள் தங்களுடைய மனோபலத்திற்காக அவரை வணங்குவர்.

ஒரு நாள் சந்திவன்டனம் செய்யாவிட்டால் என்ன ஆகும் என்று கேட்டாள் மிகவும் ஆர்வத்துடன்.

ஒன்றும் ஆகாது. தண்டனைக்காக பயந்து எதையும் எங்கள் மதத்தில் செய்வதில்லை. பிறகு ஒரு நாள் இதை விளக்கமாக சொல்கிறேன். இப்போது நீ தயார் என்றால் நான் உன்னை வீட்டிற்கு கொண்டு விடட்டுமா? என்று கேட்டான் அவசரத்துடன்.

ராஜ் நீ கவலைப்படாதே. என் தோழி இன்னும் சில நோடிகளில் வந்து விடுவாள். என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவளுடைய கைத்தொலைபேசியின் மணி ஒலித்தது.

ஓகே. ஐயாம் கம்மிங் ரைட் அவே. என்று அணைத்துவிட்டு 'ராஜ் நீ செய்த உதவிக்கு மிகவும் நன்றி என்றுவிட்டு அவன் சற்றும் எதிர்பார்காத சமயத்தில் அவனை அணைத்து அவன் கன்னத்தில் மெல்லிய முத்தமிட்டு பறந்தாள்.

சில நொடிகள் அதை ரசித்தவாரே நின்றிருந்த அவன் உடலை சிலிர்த்துக் கொண்டு அலுவலகத்திற்கு கிளம்பினான்.

## 5

*டேய். அதிர்ஷ்டக்காரன்டா நீ. இன்னிக்கு ஹிந்தி க்ளாஸில் ப்ரியா உன் பக்கத்தில உட்கார்ந்திருந்தாளாமே! - கிருஷ்ணன் அரசு மேல் நிலை பள்ளியின் கூடை பந்து மைதானத்தில் அவர்கள் வழக்கமாக சந்திக்கும் இடத்தில் கேட்டான்.*

*போடா. பக்கத்திலே உட்கார்ந்தா பெரிய விஷயமா? ராஜகோபால் முகம் சிவக்க கேட்டான்.*

*டேய். எங்க பக்கத்திலே உட்கார்ந்தாளா? உன் பக்கத்திலே தானே உட்கார்ந்தா! நான் சொல்லலே! உன்னை அவள் லவ் பண்றாடா!*

ஹாய் மேன் அந்த அழகி சிலியா உன் வீட்டிலேயே தங்கிவிட்டாளாமே நேற்று. நன்றாக கூத்தடித்தீர்களா! என்றான் க்ரிஸ் வண்டிக்குள் நுழைந்த உடனேயே!

இல்லை க்ரிஸ். நீ நினைப்பது போல் எதுவும் இல்லை. நாங்கள் தனித்தனி அறையில் தான் உறங்கினான்.

டேய். பொய் சொல்லாதே!

நிஜமா க்ரிஸ்.

நீ என்ன இம்பொடென்டா?

வி கால் இட் செல்ஃப் டிஸிப்ளின் பாக் ஹோம் க்ரிஸ் என்றான் காட்டமாக.

ஐயாம் ஸாரி. தப்பா எடுத்துக்காதே ராஜ்.

அடுக்குமாடி கார் நிறுத்தும் கட்டிடத்தில் இரண்டாம் தளத்திலிருந்த ஒரு காலியிடத்தில் வண்டியை நிறத்தினான். இருவரும் அலுவலகம் நோக்கி நடந்தார்கள்.

ஏய் சிலியா என்ன முதல் நாளே அவனோட தங்கிட்டே? அவளுடைய தோழி ஜூடி கேட்டாள்.

என்கிட்ட சாவி இல்லை அதனாலே தங்க வேண்டியதா போச்சு!

ஏய். கதைவிடாதே. என்ன பண்ணீங்க இரண்டு பேரும்.

ஒன்னும் இல்லை. ராஜ் ஒரு வித்தியாசமான மனிதன்.

அவன் என்ன கையாலாகாதவனா என்றாள் ஜூடி பெரிதாக சிரித்துக் கொண்டே.

ஐ எக்ஸ்பெக்ட் அன் அபாலெஜி ஜூடி என்றாள் சிலியா கோபத்துடன்.

ஐயாம் சாரி. என்னாச்சின்னு சொல்லு என்றாள் ஆர்வத்துடன்.

ஜூடி. இது உண்மை. எங்க இரண்டு பேருக்கும் நடுவிலே ஒன்னும் நடக்கவில்லை. அவன் என்னை தொடக்கூட இல்லை. நான் தான் காலையில் வரும் போது அவனை அணைத்து முத்தம் கொடுத்தேன்.

அவனுடைய கலாச்சாரம் என்னை வியக்க வைக்கிறது. ஒரு நாள் முழுக்க உன்னைப்போல ஒரு செக்ஸியான பெண்ணுடன் எப்படி?

ஜூடியின் கருத்து ராஜ் மேல் அவளுக்கு இருந்த மதிப்பை இன்னும் கூட்டியது.

**6**

சனிக்கிழமை ஈஸ்ட் ப்ரன்ஸ்விக் நூலகத்தில். வாராவாரம் வந்துவிடுவான். 3-4 மணி நேரம் புத்தகங்களுடன் கழிப்பான். அன்றும் நேரம் கழித்துவிட்டு வெளியே வரும் போது எதிர்ப்பட்டாள் சிலியா.

ஹாய் சிலியா. எப்படி இருக்கே!

நான் நல்லா இருக்கேன். ராஜ் எப்படி இந்த பக்கம்.

நான் சனிக்கிழமையானா இங்கே தான்.

அப்படியா. நான் எப்போதும் வெள்ளிக்கிழமை வருவதுண்டு. அடுத்த வாரத்திலிருந்து நானும் சனிக்கிழமையே வருவேன் என்று அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

அவனும் அவள் கண்ணுக்குள் நோக்கியபடியே 'நான் படிக்க வருகிறேன்" என்றான். அவளும் சளைக்காமல் 'நான் உன்னை படிக்க வருவேன்" என்றாள்.

இருவரும் கார் நிறுத்தியிருந்த இடம் வரை கூடவே நடந்து சென்றார்கள். கார் அருகே வந்தவுடன் "என்ன புத்தகங்கள் எடுத்தாய்" என்று கேட்டான்.

Encylopaedia of Ancient Indian Culture by N.N. Bhattacharyya,
Encylopaedia of Indian Culture by R. N. Saletore, Facets of Indian culture
by P.C. Muraleemadhavan.

ஹேய் என்ன இது இந்திய கலாச்சாரத்தை பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்கிறாயா? என்று கேட்டான்.

இல்லை. எனக்கு இந்தியர்களை பற்றி நிறைய தெரியனும். அதுக்காகத்தான்.

வியந்தபடியே என்னோட ஒரு மணி நேரம் தினமும் இருந்தினா நிறையா சொல்வேன் என்றான்.

ஒரு மணி நேரத்திற்கு மேலேயே இருந்தேன்னா? என்றாள் புதிர் போடுபவள் போல.

ஒரு மணிக்கு மேலா?

ஆம். உனக்கு ஆட்சேபனை இல்லைன்னா உன் வீட்டில் நான் தங்கலாமா? ஆகும் செலவை பகிர்ந்துக் கொள்வோம். ஏன்னா நான் இருந்த அறையோட ஒப்பந்தம் முடிவுக்கு வருது.

இதை சற்றும் எதிர்பாராத ராஜ் தயங்கியபடியே..

சிலியா நீ அமெரிக்கன். நான் இந்தியன்.
நீ கிறிஸ்துவ பெண். நான இந்து.
அசைவம் சாப்பிடுபவள். நான் சுத்த சைவம். எ
ன் வீட்டில் நீ இயல்பாக இருக்க முடியாது. பல கட்டுப்பாடுகள் இருக்கும். நானும் தினமும் காலையில் பூஜை செய்வேன். உனக்கு தொந்திரவாக இருக்கும். என் வீட்டில் நீ புகை பிடிக்க முடியாது. குடிக்க முடியாது.

நீ அன்று என் வீட்டில் மங்கி காட் பார்த்தாயல்லவா? அவரை பூஜிப்பவர்களின் வீடு மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும். நீ தப்பா நினைத்துக் கொள்ளாதே. உனக்கு சரிப்பட்டு வராது.

ராஜ். நான் உன் வீட்டில் இருக்க ஆசைபடறேன். உங்க கலாச்சாரத்தை உன்னோட கூட இருந்து தெரிஞ்சிக்க விரும்பறேன். இந்தியாவை பற்றியும் இந்துத்துவம் பற்றியும் நிறைய தெரியனும் எனக்கு. உன் வீட்டில் நான் குடிக்க மாட்டேன் புகைபிடிக்க மாட்டேன் அசைவம் சாப்பிட மாட்டேன். சரியா?

பட் சிலியா. எதுக்கு இவ்வளவு கஷ்டப்படனும் நீ. தினமும் 1 மணி நேரம் நாம் நூலகத்தில் சந்திப்போம். நான் எனக்கு தெரிந்த எல்லா விஷயத்தையும் உனக்கு சொல்றேன் என்றான் குழப்பத்துடன்.

அவள் கோபித்துக்கொண்டே ராஜ் உனக்கு பிடிக்கலைன்னா விட்டுடு. சும்மா காரணம் சொல்லவேண்டாம்.

சரி. உன்னோ பொருட்களை எடுக்க எப்ப உன் வீட்டுக்கு போகலாம் என்றான் ராஜ் ஒரு முடிவுடன்.

அவள் கண்களில் சந்தோஷத்துடன் அவனை ஒரு நொடி அணத்துவிட்டு நாளை சாயங்காலம் நானே வர்றேன்.

சரி. ஒரு போன் பண்ணிட்டு வா என்று அங்கிருந்து விலகினான் யோசனையுடன்.

தப்பு செய்ய வாய்ப்பு கிடைக்காதவர்கள் நல்லவர்கள் என்று சொல்லி விட முடியாது. தப்பு செய்ய வாய்ப்பு கிடைத்தும் தைரியம் இல்லாது தப்பு செய்யாதவர்களும் நல்லவர்கள் என்று சொல்லி விட முடியாது. தப்பு செய்ய வாய்ப்பு கிடைத்தும் தைரியம் இருந்தும் தப்பு செய்யக் கூடாது என்று கட்டுப்பாடுடன் இருப்பவர்களே நல்லவர்கள்.

*ராஜு கண்ணா. நம்ம சாதியிலே நம்ம கலாச்சாரத்திலே நடக்கற கல்யாணம் கூட இப்ப விவாகரத்தில போய் முடிஞ்சிடுது. எங்க முன்னாடி நாங்க சொல்ற பொண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கனும் ஆசை படறோம்.*

*ஆனால் அந்த பொண்ணை உனக்கும் பிடிச்சிருக்கனும். உனக்கு பிடிக்கிற பொண்ணு கிடைக்கிற வரைக்கும் நாங்க தேடிகிட்டு இருப்போம்.*

*ஆனா வேற நாட்டுப் பெண்ணையோ வேற மதத்து பெண்ணையோ கொண்டு வராதப்பா. மதம் சாதி இதுக்கு மீறி யோசிக்கிறவன் தான் நானும். ஆனா பல ஆண்டுகாலாம தப்போ ரைட்டோ ஏதோ ஒரு வழியிலே நம்ப கலாச்சாரம் போயிகிட்டு இருக்கு.*

*அதை மாத்தினா குழப்பம் தான் வரும். உன் அக்கா டைபிங் க்ளாஸ் போகும் போது நீ அவளுக்கு துணையா கூட போற! ஏன்? ரௌடி பசங்க தொந்திரவு பண்ணக்கூடாதுங்கறதுக்காக. நீ இன்னொத்தனோட தங்கச்சியை பார்த்தா அவன் அண்ணனுக்கு எப்படி இருக்கும்?*
*நான் சொல்றதை நீ என் இடத்தில இருந்து யோசிச்சிப்பார்த்தா உனக்கு தெரியும்.*

அப்பா உங்க மதிப்புக்கும் மரியாதைக்கும் எந்த குழப்பம் வராமல் நான் பார்த்துக்கறேன் என்று சொல்லிக் கொண்டான் தனக்குத்தானே.

## 7

அவள் அழைக்காவிட்டாலும் அவள் வீட்டிற்கு சென்று அவளுடைய பொருட்களை எடுத்து வர ராஜ் சென்றான். வண்டியில் அனைத்தையும் நிரப்பி அவன் வீட்டிற்கு வந்தவுடன் காரை நிறுத்திவிட்டு வண்டியிலேயே அமர்ந்திருந்தான்.

என்ன வண்டியிலேயே உட்கார்ந்திருக்கே. சாமான் இறக்கவேண்டாமா? என்று கேட்டாள் சிலியா.

இறக்கலாம். என் வீடு நோ ஸ்மோகிங் ஸோன். இல்லையா! அதனால் நீ புகைப்பிடித்துவிட்டு வா நான் இங்கே காத்திருக்கிறேன்.

நான் புகைப்பிடிப்பதை நிறத்திவிட்டேன்.

என்ன? சிலியா! நான் வீட்டில் தான் புகைபிடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். உன்னை நிறுத்த சொல்லவில்லை.

தெரியும் நானாகத்தான் நிறுத்திவிட்டேன்.

குடிப்பதையும் நிறத்திவிட்டாயா ? என்று சிரித்தபடியே கேட்டான்.
ஆம்.

என்ன? கிண்டலா?

இல்லை. நிஜமாகத்தான்.

எதுக்கு?

சும்மா என்று சொல்லி கண்ணடித்தாள்.

அவள் செய்கை எதுவும் புரியாமல் வண்டியிலிருந்த அவளுடைய பொருட்களை எடுத்து வீட்டிற்கு சென்று அதை சரியாக அடுக்க அவளுக்கு உதவிசெய்தான். தொண தொணவென்று எதாவது கேட்டுக் கொண்டே இருந்தாள். அவனும் பொறுமையாக எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டே வந்தான்.

பிறகு குளித்துவிட்டு வேஷ்டியுடன் இறைவன் முன் அமர்ந்து ஓம் என்று சொல்லிவிட்டு தியானம் செய்யத் தொடங்கினான்.

அதைப்பார்த்த சிலியா அவன் அருகில் வந்து அமர்ந்து அவன் என்ன செய்கிறான் என்று பார்த்தாள்.

சில விநாடிகள் சீராக அவனிடமிருந்து சுவாசம் வந்துக் கொண்டிருந்தது. பிறகு அதுவும் நின்றுவிட்டது. மரக்கட்டை போல் அவன் உடம்பு ஆகிவிட்டது.

வியப்புடன் அவள் கடிகாரத்தை பார்த்தாள். 15 நிமிடத்திற்கு பின் அவன் உடல் தளர்ந்து சகஜ நிலைக்கு வருவதை பார்த்தாள். உலக அதிசயத்தை கண்டது போல் வியந்தாள். அவனுடைய மார்பும் தோளும் அவளை ஈர்த்தது.

இறைவனை கும்பிட்டுவிட்டு எழுந்து அவன் ஹேய் மறுபடியும் என்னை பார்க்க ஆரம்பித்துவிட்டாயா? நான் என்ன ஆராய்ச்சி பொருளா என்று சிரித்தபடியே கேட்டான்.

அவள் எதுவும் பேசவில்லை. மெதுவாக எழுந்து அவன் பின்னால் சென்று அவனை இறுக அணைத்தாள். அவன் உடலில் பல மாற்றங்கள். நிறம் இல்லா திரவம் அவன் உடலுள் அங்கும்

இங்கும் ஓடியது. அவளுடைய கைகளை மெதுவாக அவன் விடுவித்துக் கொண்டான்.

ஒரு அரை கை சட்டையை எடுத்து அணிந்துக் கொண்டு தொலைக்காட்சி பெட்டியை துவக்கினான். ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

சிலியா அவன் அருகில் வந்து அவன் இடக்கையை அவளுடைய வலக்கையால் இறுக்கிப் பிடித்தாள். ஐயாம் ஸாரி ஐயாம் ஸாரி என்று அரற்றினாள்.

பரவாயில்லை சிலியா என்றுவிட்டு மறுபடியும் அவளுடைய கையை விடுவித்தான்.

சிலியா ஐயாம் நாட் இன்டெரஸ்டட் இன் அ ஷார்ட் டேர்ம் ரிலேஷன்ஷிப்.

நானும் தான் ராஜ். நான் உன்னுடனேயே இருக்க விரும்புகிறேன்.

அது நடக்காது சிலியா.

ஏன் ராஜ்? நான் அழகா இல்லையா?

இல்லை. நீ ஒரு அழகு தேவதை.

நான் கன்னித்தன்மை இழந்தவள் என்று நீ நினைக்கிறாயா?

இல்லை சிலியா. விஷயம் அதுவில்லை.

நீ வேறு யாரையாவது காதலிக்கிறாயா?

இல்லை.

வேறு என்ன பிரச்சினை உனக்கு.

நாம் இருவரும் எல்லா விதங்களிலும் வேறுபட்டவர்கள். ஏதோ ஒரு ஈர்ப்பில் நாம் திருமணம் செய்து கொண்டாலும் அது சில வருடங்களுக்கு மேல் நீடிக்காது.

ஏன் அப்படி நினைக்கிறாய் நீ?

இந்தியாவில் திருமணம் ஒரு ஆணுக்கும் பெண்ணிற்கும் நடப்பதில்லை. அது இரண்டு குடும்பங்களுக்கு இடையே நடப்பது. நீங்கள் சுதந்திரமாக வளர்ந்து பழக்கபட்டுவிட்டீர்கள். நாங்களோ தியாகம் செய்தே வளர்ந்தவர்கள். சகிப்புத்தன்மை எங்கள் ரத்தத்தில் ஊறியிருக்கிறது. அதனால் தான் சின்ன விஷயங்களுக்கெல்லாம் நாங்கள் விவாகரத்து செய்வதில்லை.

Marriages are meant to be long term in our country. It will not work-out
with us.

நான் எக்காரணத்தை கொண்டும் உன்னை விவாகரத்து செய்ய மாட்டேன் ராஜ்.

அது இல்லை சிலியா. உனக்கு எப்படி புரியவைப்பேன். உன்னை முத்தமிட்டால் எனக்கு சிக்கன் வாசம் வரும். அசைவத்தை கண்டாலே மூக்கை அடைத்தே பழகவிட்டவர்கள் நாங்கள்.

நான் நிரந்தரமாக சைவமாகிவிட்டால்?

ஐயோ. யூ ஆர் கிரேஸி. திங் ப்ராக்டிக்கல்லி சிலியா. பல

தியாகங்கள் செய்தாவது ஏன் நீ என்னை திருமணம் செய்துக் கொள்ளவேண்டும்?

ராஜ். ஆண் பெண் சமம் என்று சொல்வார்கள் அமெரிக்காவில். இதுவரை ஏதாவது ஒரு பெண் ஜனாதிபதியாக முடிந்தததா?

இப்போது தான் சிபிஸி சானலில் ஒரு முழு நேர பெண் தொகுப்பாளர் ஆக முடிந்தது. இந்த நாட்டில் பெண்கள் ஒரு காம கேளிக்கை பொருள் தான். உடலின் ஈர்ப்பு முடிந்ததும் ஆண் விவாகரத்து செய்துவிட்டு வேறு ஒரு பெண்ணுடன் போய்விடுகின்றான். அவள் அவனுடைய குழந்தைகளை வைத்துக் கொண்டு வேலையும் செய்து கொண்டு அல்லாடுகிறாள். அவள் சோர்ந்து போனால் கேட்பதற்கு ஆளிலில்லை வீட்டில். இந்த சமுதாயத்தில் பிள்ளைகளும் அவர்கள் தேவை முடிந்ததும் ஓடிவிடுகின்றனர்.

ஆனால் இந்தியர்கள் அப்படி இல்லை. மனைவியுடன் சாகும் வரை இருக்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்கள் சாகும் வரை கூடவே இருக்கிறார்கள். எனக்கு அந்த அன்பு தேவை. அரவணைப்பு தேவை. பாதுகாப்பு தேவை. என்னுடைய அழகு அழிந்த பின்னும் நீ என்னை கைவிடமாட்டாய். எனக்கு நீ தேவை ராஜ்.

அவள் கண்களில் கண்ணீர் தேம்பி நின்றிருந்தது.

சிலியா!

அவள் அமைதியாக இருந்தாள்.

குளிர்சாதனப்பெட்டியிலிருந்த குடி நீர் எடுத்து அவளிடம்

கொடுத்தான். அவள் தலையை லேசாக கோதினான். அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு அவள் பிடிப்பை தளர்த்தினான்.

சிலியா. நான் சொல்வதை கேள். நாமிருவரும் சந்தித்து 2 வாரம் தான் ஆகிறது. இதைப்பற்றி இன்னும் சில நாட்கள் கழித்து பேசுவோமா?

அவளும் சரியென்று தலை ஆட்டினாள்.

வெளியே சென்று சாப்பிடுவோமா?

அதற்கும் சரியென்று தலை ஆட்டினாள்.

இருவரும் வண்டியில் அமர்ந்து டைலர்ஸ் அவென்யூ விடுத்து எக்கர்ஸ் தெருவிலிருந்து வலப்புறம் எடுத்து ரூட் 18 பிடித்து பர்கர் கிங்-ன் பார்கிங்கில் காரை நிறத்திவிட்டு உள்ளே நுழைந்தனர்.

ஓலா என்று ஸ்பானிஷ் மொழியில் அங்கிருந்த மெக்ஸிக்கன் பெண்ணிடம் கூறிவிட்டு 'ஒன் வெஜி வாப்பர் ப்ளீஸ்" என்றுவிட்டு சிலியாவைப் பார்த்தான் அவள் செல்லமாக முறைத்ததை பார்த்துவிட்டு "டூ" என்றான்.

இரண்டு வார பழக்கத்தில் தான் கண்ட அமெரிக்க பெண்மணிகளிலேயே அரிதாரம் இல்லாத அழகி இவள் மட்டும் தான் என்று நினைத்துக் கொண்டான்.

நீ மட்டும் ஐயங்காராய் பிறந்திரந்தால் அம்மா முன் கொண்டு நிறத்தியிருப்பேனடி பெண்ணே! என்றான் மனதுக்குள்ளே.

அவளுடைய மென்மையான கைகளை உணர்ந்த அவனுடைய கைகள் மீண்டு அவற்றை வேண்டியது. அவள் அலட்சியமாக அமர்ந்து விரல்களால் ஏதோ வரைந்து கொண்டிருந்தாள்.

இரண்டு ரொட்டிகள். அதன் நடுவே ஏகப்பட்ட காய்கறிகள். இதுதான் வெஜி வாப்பர். கடவுளே இந்த இலை தழைகளை எத்தனை நாள்தான் தின்பது? நன்றாக இட்லி சாம்பார் சாப்பிட்டால் என்ன? இவளை கல்யாணம் செய்து கொண்டால் இவளால் பர்கர் தான் செய்யமுடியும். தமிழ் அம்மணி போல் ஆகுமா? ஆனால் தமிழ் பெண்மணிகள் இத்தனை அழகாக இருப்பதில்லையே! உணவா காமமா என்று போட்டி வைத்தால் எது ஜெயிக்கும். இவ்வாறாக நினைவுகள் ஓடிக்கொண்டிருந்தது அவனுள்ளே!

வாட் ஆர் யூ திங்கிங். என்றாள் சிலியா.

ஐ விஷ் ஐ கான் சேன்ஜ் யூ டூ அ டமிள் ப்ராமின் கேர்ள். நிஜமாகவா?

ஆம். இன்னும் சில நாட்கள் உன்னுடன் இருந்தால் நானே உன்னை காதலித்துவிடுவேனோ என்று பயப்படுகிறேன் என்றான்.

காதலியேன்!

சரிதான். வீட்டில் அடி விழும்.

தமிழ் ப்ராமண பெண்மணியாகவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

அது கஷ்டம் சிலியா.

நீ சொல்லேன் என்றாள்.

ம். சரி. முதலில் நீ புகை குடி மாமிசம் இதையெல்லாம் விடவேண்டும்.

அதை தான் விட்டுவிட்டேனே!

பிறகு நீ தமிழும் சமஸ்கிரதமும் பயில வேண்டும்.

அது எதுக்கு?

ஏனென்றால் என் அம்மாவை கவரவேண்டும் என்றால் நீ எல்லா தமிழ் சமஸ்கிருத ஸ்லோகங்களையும் சொல்லவேண்டும்.

அது கஷ்டமா?

கஷ்டமா? சமஸ்கிருதம் பயின்ற எனக்கே பல ஸ்லோகங்கள் தெரியாது.

பிறகு?

இந்து பண்டிகைகளையும் அதன் பாரம்பர்யத்தையும் நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்புறம்?

சேலை உடுத்த தெரிய வேண்டும். பஞ்ச கச்சம் போடவேண்டும். அப்படியென்றால்.

அது ஒரு ஃபாஷன் என்று வைத்துக் கொள்ளேன்.

பிறகு?

உன் பெயரை மாற்ற வேண்டும்

என்ன பெயர்?

சிந்து என்று மாற்றிவிடலாம்.

சிந்து என்றால்?

அது ஒரு நதியின் பெயர்.

ம். நான் இந்துவாக மதம் மாறவேண்டுமா?

இந்து மதத்தில் மதம் மாறும் வழக்கம் இல்லை.

அப்படியா? மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறதே!

ஆம்.

பிறகு என்ன செய்யவேண்டும்.

ஹேய். என்ன நிஜமாகவே சொல்கிறேன் என்று நினைத்தாயா! நான் ஏதோ விளையாட்டிற்கு சொல்கிறேன். நடக்கிற வேலையை பாரு. இதெல்லாம் நடக்காத காரியம்.

நடத்திக் காட்டிவிட்டால்!

வேண்டாம் சிலியா. நாம் அநாவசியமாக நம் மனதை குழப்பிக் கொள்ள வேண்டாம்.

ராஜ். உன்னை அடைய நான் என்ன வேண்டுமானாலும் செய்யத்தயாராக இருக்கிறேன்.

சிலியா!

அவன் கைகளை இறுக பிடித்தாள். இவள் சொல்வதெல்லாம் நடக்குமா? நடந்துவிட்டால் அப்பா அம்மாவை சமாளிக்க முடியுமா என்று கற்பனையில் கோட்டை கட்டினான்.

## 8

சுமார் ஒரு வாரம் இப்படியாக ஓடியது. தினமும் க்ரிஸ் என்ன நடந்தது என்று ராஜை கேட்க ஜூடியோ தினமும் சிலியாவுக்கு போன் செய்து என்ன நடந்தது என்று கேட்க இருவரும் ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நிறங்களையும் மீறி மதங்களையும் மீறி சைவ அசைவ கட்டுப்பாடுகளுக்கும் மீறி ஒரு அழகான புனிதமான காமத்தை அடிப்படையாக கொள்ளாமல் ஒரு காதல் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தது.

சில முறைகள் கைகள் கோர்த்துக் கொள்வது பல முறை அதை விடுவித்து விட்டு வருத்தபடுவதுமாக ராஜ் இரு தலை கொள்ளியாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான்.

அவனால் அம்மா அப்பாவை விடமுடியாது சிலியாவையும் மறக்க முடியாது என்ற நிலை.

கடைசி இரண்டு நாட்களாக குட் நைட் கிஸ் வேண்டும் என்று அவள் அடம் பிடித்து தன் நெற்றியில் அவன் உதடுகளை பதிக்க வைத்திருந்தாள். அதுவே அவளுக்கு பெரிய வெற்றியாக இருந்தது. இந்த ஒரு வாரத்தில் ராமாயணத்தை முழவதுமாக அறிந்திருந்தாள். ராமர் ராஜ் தான் என்ற முடிவுக்கே வந்துவிட்டாள்.

அது எப்படி பல மனைவிகள் கொண்ட தந்தைக்கு பிறந்த பின்னும் ஒரு மனைவிக்காக ராமன் வாழ்ந்தான் என்பது வியப்பாக இருந்தது.

இந்த வாரம் அவள் படித்த கல்லூரியில் ராமாயணத்தை பற்றி பேசப்போவதாக கூறினாள். அதற்காக ராஜிடமிருந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டாள். ராமாயணத்தை ஏற்று நடந்தால் அமெரிக்கா சொர்கம் ஆகிவிடும் என்று நினைத்தாள்.

லட்சுமனின் கதாபாத்திரமும் அவளை வெகுவாக ஈர்த்திருந்தது. அண்ணனுக்காக தன் இளமை காம தேவைகளையும் அடக்கிக் கொண்டு ஒருவன் இருந்தான் என்பது அவளை பைத்தியம் அடித்துவிட்டது.

அவளும் ராஜூடன் சேர்ந்து ஹனுமான் சாலிஸா படிக்கத் தொடங்கியிருந்தாள். அவள் கேட்கும் கேள்விகளுக்கு சில முறை அவனே திக்கு முக்காடி போய்விட்டான்.

சீதை தன் கணவனை போல துறவறம் ஏற்று சென்றவள் ராவணன் கடத்திக் கொண்டு சென்றபோது நகைகைள எப்படி தூக்கி எறிய முடிந்தது? துறவறம் என்றால் வெறும் காவியுடை மட்டும் தானே! ராஜ் தன் தந்தையை கேட்டு சொல்வதாக மழப்பிவிட்டான்.

அன்று தன் பழைய கல்லூரியில் காலட்சேபம் முடித்துவிட்டு வந்தவள் நேராக ராஜின் அறைக்கு சென்றாள். அவன் அப்போது தான் உறங்க சென்றிருந்தான்.

ராஜ் நான் இன்னிக்கு உன்னோடு படுத்துக்கப் போறேன்.

சிலியா. என்ன இது விளையாட்டு.

இல்லை. நான் உன்னோடதான் படுப்பேன்.

வேண்டாம் சிலியா. இதுவரை நம்மோட நெருக்கமே என்னை பாதிச்சிகிட்டு இருக்கு. இது விபரீத விளையாட்டு.

உன் மேல உனக்கு நம்பிக்கை இருக்கா?

இருக்கு.

என் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. தள்ளிப்படு என்று கூறிவிட்டு அவன் போர்வைக்குள் நுழைந்தாள்.

இன்னிக்கு நான் செத்தேன் என்று நினைத்தான்.

அவனுடைய வலப்புறம் படுத்த அவள் அவன் மேல் உருண்டு அவனுடைய இடப்புறத்தில் வந்து படுத்தாள். அவளுடைய உடல் படக்கூடாத இடங்களில் பட்டு அவனை துவம்சம் செய்தது.

சிலியா. நாம அபாயகரமான நிலையில் இருக்கோம்.

இல்லை. ஒன்னும் இல்லை. நீ படு என்றுவிட்டு அவனுடைய இடக்கையை இறுக்கி பிடித்தாள்.

வேண்டாம் சிலியா என்றான் பலவீனமாக. அவனுக்கு அதை தேவைபட்டது. கடைசியா ஒரு முறை ஹிந்தி க்ளாசில் ப்ரியாவை இடித்தது ஞாபகம் வந்தது. பிறகு சென்னையில் அந்த பெண்.

தினமும் ஏதாவது கேட்கும் சாக்கில் இவன் மீது வந்து விழுவாள். ஒரு முறை அவளுடைய கோட் கம்பைல் செய்ய உதவும் போது அவளுடைய கம்ப்யூட்டரின் மௌசின் மேல் அவன் கை இருக்க அதன் மேல் அவள் கைவைத்ததும் "ஐயாம் நாட் ஃபார் திஸ் பேபி"

என்றுவிட்டான்.

இந்த நெருக்கத்தில் ஒரு பெண் அதுவும் இத்தனை குறைந்த ஆடைகளுடன். ஜமாய் என்றான் உள்ளே இருந்த காமன். அபாய சங்கு ஊதியது அவன் பண்பாடு.

அவள் அவனுடைய தோளில் தன் தலையை வைத்தாள். பெண்களின் கூந்தல் திருவிளையாடல் வசனம் ஏனோ நினைவுக்கு வந்து தொலைத்தது. நீ என்ன வேண்டுமானாலும் செய்யடி பெண்ணே இந்த விசுவாமித்திரனின் தவம் கலையாது என்று சொல்லிக் கொண்டான். ஐயோ விசுவாமித்திரனின் தவமும் ஒரு முறை கலைந்துவிட்டதே என்று வருந்தினான்.

அவள் அவளுடைய இடது கையை அவன் மார்பில் வளைத்தாள். உடலை மரக்கட்டயாக ஆக்கிக் கொண்டான். ஆழ்ந்து மனமுவந்து மனதில் வந்த ஸ்லோகங்களை சொல்ல ஆரம்பித்தான்.

அவள் அதற்கு மேல் படரவில்லை. அவனை அணைத்துக் கொண்டு உறங்கத்துவங்கினாள். அவளுடைய மனம் அமைதியடைந்திருந்தது.

ராமாயணத்தை பற்றி பேசி அனைவரின் பாராட்டையும் பெற்றாள். அங்கிருந்த ஒரு இந்திய ஆசிரியர் அவளை உச்சி மோர்ந்து என் நாட்டு காவியத்தின் பெருமையை உன்னால் அறிய முடிந்தது என்று கூறி அழுதே விட்டார். செய்தித்தாள் தொலைகாட்சி நிருபர்கள் என்று அவளை அனைவரும் சூழ்ந்துக் கொண்டனர்.

பல கேள்விகளுக்கு விடை கொடுத்த பிறகு ஒரு கேள்வி அவளை பாதித்தது.

*Ramayana is a fact or fiction?*

How does it matter? We need to learn what we need to. Whether its from
the facts or fiction, history or mere imagination, how does it matter?

*Do you think its possible in this century that a man can be just a onewoman person?*

Yes. Its possible. If a man doesn't want his girl to sleep with many he needs to follow that himself too.

*Do you know somebody who lives like Ram?*

Yes I know.

Who is it?

இந்த கேள்விக்கு பதில் சொல்லாமல் புன்னகைத்துவிட்டு நகர்ந்தாள். ஒரே படுக்கையிலிருந்து அவள் இன்று இவனுக்கு வைத்தது ஒரு பரீட்சை. அதில் அவன் நூற்றுக்குநூறு வாங்கியதில் அவளுக்கு ஆனந்தம்.

அவளுக்கு அவன் உடல் தேவைப்பட்டது. ஆனால் அவசரம் இல்லை. அவனை ஆயுள் முழுக்க தனதாக்கி கொள்ள நினைத்தாள். தன்னுடைய இனத்தில் அவள் கண்டிராத கேட்டிராத ஒரு குணம்.

ராஜிடம் இருந்த அந்த சக்தி. பலம். கட்டுப்பாடு. இவனே என் ராமன்.
ராமனுக்காக 14 வருடம் தான் அந்த சீதையால் இருக்க முடிந்தது. இவனுக்கா நான் 28 வருடம் கூட காத்திருப்பேன்.

அந்த அமெரிக்க பெண் தன்னுடைய பெண்மையை முதன் முறையாக உணர்ந்தாள். க்ரிஸை மானசீகமாக புகழந்தாள்.

அவனை இன்னும் இறுக்கி அணைத்துக் கொண்டு உறங்கினாள்.

காணாமல் போன குழந்தைக்கு மீண்டும் அம்மா கிடைத்துவிட்டால் மறுபடியும் எங்கே அம்மா தொலைந்துவிடுவாளோ என்ற பயம் இருக்கும் இல்லையா? தானே அம்மாவை கட்டி அணைத்து அவளிடம் இருந்து இனி பிரியாமல் இருக்கவேண்டும் என்று அந்த குழந்தை நினைக்கும் அல்லவா? அது போன்ற அணைப்பு அது. காமம் இல்லை. ஒரு பெருமை. ஒரு மகிழ்ச்சி. ஒரு சாதனை. தான் கண்ட ராமனை அவள் இழக்கத் தயாராகவில்லை.

இங்கு ராமாயண காலட்சேபம் அங்கோ ஒரு மகாபாரதப்போர். அவன் அங்கங்கள் சூடேறியிருந்தன. உடல் அனலாக பற்றியெரிந்தது. வேண்டும் வேண்டாம் என்ற மனப்போராட்டம்.

எத்தனை நேரம் இப்படியிருந்திருப்பான் என்று தெரியவில்லை. அவனுக்கு தெரிந்த எல்லா ஸ்லோகங்களையும் சொல்லி முடித்துவிட்டு உறங்கச் சென்றான்.

## 9

காலையில் அவன் குளித்து முடித்து பூஜை செய்துவிட்டு வந்தவனுக்கு ஒரு ஆச்சர்யம். உணவு மேசையின் மீது பருப்பு சாதம் தயாராக இருந்தது. பக்கத்திலே இந்திய சமயலைப்பற்றி ஒரு புத்தகம். இவள் என்னை உண்டு இல்லையென்று ஆக்காமல் விடமாட்டாள் போலிருக்கிறதே!

ராஜ். நல்லா இருக்கியா? என்றாள் மழலை தமிழில்.

வாட். சிலியா? யூ ஆர் லேர்னிங் டமிள்?

ஆம் என்றாள்.

ராஜ் எனக்கு ஒரு உதவி செய்கிறாயா?

என்ன?

அவள் மெதுவாக அவன் அருகில் வந்து அமர்ந்து அவன் கைகளை எடுத்து அவளுடைய நெஞ்சில் பதித்துக்கொண்டாள். என்னடா இது காலையிலும் இந்த கூத்து தொடங்கிவிட்டதே இதை எப்படி சமாளிப்பது என்று யோசித்தவாறே இருந்தான்.

இடது கையிலிருந்த யூ எஸ் ஏ டுடேவை புரட்டி நான் நேற்று கொடுத்த நிகழ்ச்சியை பற்ற செய்தி வந்திருக்கிறது என்றாள் குழந்தையின் குதுகலத்துடன்.
அதை படித்த அவன் வாவ் சிலியா நீ என்னை பெருமைக்குள்ளாக்கிவிட்டாய் என்று அவளை அனைத்துக் கொண்டான்.

சொல் என்ன உதவி வேண்டும் என்று சொல் என்றான்.

நான் உங்க வீட்டுக்கு போகனும்.

என்ன?

ஆம்.

அதெப்படி முடியும் சிலியா?

ராஜ். நான் சொல்வதை கேளு. நானும் என்னுடைய தோழியும் உங்க ஊருக்கு போறோம். அவள் நிஜமாகவே இந்தியாவைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்போறா. ஆனா நான் உங்க அப்பா அம்மாவுடன் பழகப் போறேன். ஒரு வேளை அவங்களுக்கு பிடிச்சிருந்தா நம்ம கல்யாணம் சுலபமாக நடக்கும் இல்லையா?

என்னடா வம்பாக இருக்கே? நாம் நினைத்ததைவிட இந்த பெண் உறுதியாக இருக்கிறாளே!

சரி. நான் எங்க அப்பா அம்மாவுக்கு கடிதம் எழுதறேன். ஆனா ஒன்னு நீ எனக்கு தெரிஞ்சதாகவோ என் வீட்டில் இருக்கறதாகவோ சொல்லக் கூடாது. அது ரொம்ப பிரச்சினையாகிடும்.

மூச் என்றாள் புன்னகையுடன். பிறகு இந்தியாவுக்கு விசா பயணத்திற்கான தயாரிப்புகளை செய்யத் தொடங்கினாள். விளையாட்டாக அவனுடன் அன்று படுத்தவள் தினமுமே அவன் அறையில் படுக்கத்தொடங்கினாள்.

ஒவ்வொரு நாளும் தன் கன்னித்தன்மைக்கு பங்கம் வராததை கண்டு

அவள் பூரித்து போனாள். அவள் தோழிகள் எல்லாம் ராஜுவுடைய இந்திய நண்பர்கள் யாராவது இருந்தால் தனக்கும் அறிமுகபடுத்தி வை என்று அவளை நச்சரிக்கத் துவங்கிவிட்டார்கள்.

வால் மார்ட் பாத் பார்க் என்று வீட்டு சாமான்கள் வாங்க கடை வீதிக்கு செல்லும் போதெல்லாம் தொலைபேசியில் தன் தோழிகளை அழைத்து அங்கே வரச்சொல்லிவிடுவாள்.

பிறகு ஏதேர்சையாக சந்திப்பது போல் ராஜை அவள் தோழிகளுக்கு அறிமுகப்படுத்தி வைப்பாள். இதுவே ஒரு வழக்கமாகிவிட்டது. இவள் இந்திய பெண்ணாக மாறுவதைப் பார்த்து அவளுடைய தோழிகளும் புகை குடியை நிறுத்தி சைவமாக மாற முயன்றுக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் அப்படி மாறியபிறகு தாங்கள் சொர்கத்தில் இருப்பதாக உணர்ந்தனர். சத்தமில்லாமல் சிலியா நியு ஜெர்ஸியின் அந்த சிறிய நகரமான ஈஸ்ட் ப்ரனஸ்விக்கில் ஒரு கலாச்சார புரட்சி செய்துக் கொண்டிருந்தாள்.

அவனோ ஒவ்வொரு நாளும் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த அந்த அழகு பதுமையுடன் வெறும் கனவில் உடலுறவு கொண்டிருந்தான். ஆனாலும் அவன் தன்னுடைய மனோபலத்தை இழக்கவில்லை. 15 நிமிட தியானம் 30 நிமிடமாக மாறியிருந்தது.

# 10

சென்னை விமானத்தில் தோழி ரீடாவுடன் வந்திறங்கினாள் சிலியா. வியாழன் காலை. முரளி வந்திருந்தான். அவர்களை அழைத்துச் சென்று கோடம்பாக்கம் பார்க் ராயல் ஓட்டலில் தங்க வைத்தான். வெள்ளி இரவு கிருஷ்ணனும் ராஜூவும் விழுப்புரம் செல்லும் போது அழைத்து செல்வதாக திட்டம்.

முரளி விடைபெறுவதற்கு முன்பு சிலியா அவனை நிறுத்தினாள். முரளி உங்களுக்கு காயத்திரியை தெரியுமா என்றாள்.

எந்த காயத்திரி?

ம். அவனுடன் வேலை செய்த பெண். அவன் மௌஸில் கை வைக்கும்போது அவளும் வைத்தாளாமே? அந்த பெண்.

ஓ அவளா. தெரியும். இப்போது ஒரு கால் சென்டரில் தான் வேலை செய்கிறாள். அவளுக்கென்ன?

அவளை பார்க்க வேண்டுமே?

என்ன? குழப்பமாக பார்த்தான்.

ஆமாம்.

சரி. என்ன சொல்லி உங்களை அழைத்து போக என்று யோசிக்கிறேன்.

ஏதாவது காரணம் சொல்லுங்கள் என்றாள்.

அன்று மதியம் ஏதோ வெளிநாட்டு கம்பெனி நேர்முக தேர்வு

நடத்துவதாக சொல்லி காயத்திரியை ஓட்டலுக்கு அழைத்து ரீடாவிற்கும் சிலியாவுக்கும் அறிமுகப்படுத்தினான்.

ஒரு சில கேள்வி கேட்டபிறகு, காயத்திரி நீங்கள் யாரையாவது காதலித்திருக்கிறீர்களா? என்று கேட்டாள் சிலியா.

இது என்ன மென்பொருள் கம்பெனியா இல்லை திருமணம் நடத்தும் நிறுவனமா? என்று நினைத்தாள் காயத்ரி.

ஆம்.

இப்போது உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா?

ஆம்.

நீங்கள் காதலித்தவரையே திருமணம் செய்து கொண்டீர்களா?

இல்லை.

ஏன்?

நான் காதலித்தவன் என்னை காதலிக்கவில்லை.

அவருடைய பெயரை தெரிந்துக் கொள்ளலாமா?

ஷங்கர்.

ராஜகோபால் என்று பதில் சொல்வாள் என்று எதிர்பார்த்தவளுக்கு இந்த பதில் குழப்பமாக இருந்தது.

சரி நீங்கள் போகலாம். இமெயிலில் உங்களுக்கு தகவல்

அனுப்புகிறோம்.

காயத்திரி விடைபெற்று சென்றாள். போகும்போது முரளியிடம் என்னப்பா கம்ப்யூட்டர் பத்தி ஒன்னுமே கேட்கலையே என்றாள்.

அதுவா அவர்கள் ஹெச் ஆர் இன்டர்வ்யூக்காக வந்திருக்கிறார்கள் என்று மழுப்பினான்.

உள்ளே வந்த முரளியை பார்த்து என்ன முரளி அவள் ஏதோ ஷங்கர் பெயரை சொல்றாளே? அவள் ராஜகோபாலை காதலிக்கவில்லையா?

ஹா ஹா அவள் எங்கள் ஆபீஸில் காதலிக்காத ஆளே இல்லை. கடைசியாக அவள் வலை வீசியது ஷங்கருக்கு என்றான் சிரித்தபடியே.

என்ன நீங்கள் இந்திய பெண்களும் அமெரிக்க பெண்கள் மாதிரிதானா? நான் என்னமோ நினைத்து வந்தேன்.

ஆம் சிலியா. இந்தியாவில் கலாச்சாரம் மாறிக் கொண்டிருக்கிறது. கால் சென்டர் பிபிஓ வெளிநாட்டு கம்பெனிகள் மல்டிப்லெக்ஸ் வேலை கை நிறைய சம்பளம் வெளிநாட்டு டெலிவிஷன் சேனல்கள் அதிகமான கல்யாண செலவுகள் பொறுப்பில்லாத பெற்றோர்கள் பெற்றோர்கள் பேச்சை கேட்காத பிள்ளைகள் திருமணத்திற்கு முன்பே உடல் உறவுகள் என்று பெரிய அளவில் கலாச்சார சீரழிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

அமெரிக்கர்களிடத்திலிருந்த அறிவு திறமை கடின உழைப்பு பொறுப்பு சுதந்திர பாங்கு இவைகளை கற்காமல் அவர்களுடைய

உணவு உடை செக்ஸ் கலாச்சாரம் இதைத்தான் இவர்கள் கற்றிருக்கிறார்கள் என்று பொரிந்து தள்ளினான் முரளி.

இதை கேட்டு அதிர்ந்து போனாள் சிலியா.

ஆனால் ராஜகோபால்?

ஆஹா. அவனா? இந்திய கலாச்சாரம் இன்னும் உயிருடன் இருக்கிறது என்றால் அவனைப் போல சில ஆட்களால் தான். இன்னும் கேட்டால் எங்கள் குருப்பே இப்படித்தான். பொது நல சேவை இரத்த தானம் கோவில் குளம் விவேகானந்தர் யூத் க்ளப் என்று வித்தியாசமானவர்கள் நாங்கள். சின்ன வயதில் சைட் அடித்தாலும் காதலித்தவளையே கட்டுவது இல்லை கட்டினவளை காதலிப்பது என்று எடுக்காத ஒரு சபதத்தையே எடுத்ததாக காப்பாற்றி வருகிறோம்.

இதை கேட்டு அசந்து போனாள் சிலியா. சைட் என்றால் என்ன?

டேட்டிங்கா?

ஆஹா அப்படியெல்லாம் இல்லை சிலியா. தூரத்திலிருந்த பார்ப்பதை தான் சைட் என்போம்.

ஹா ஹா அப்படியென்றால் எங்களை பொருத்தவரை நீங்கள் கற்கால மனிதர்கள். எங்கள் ஊரில் 13 வயதில் பெண்களுக்கு கருகலைப்பு நடந்துவிடுகிறது.

இன்னும் 20 ஆண்டுகளில் இந்தியாவும் அப்படி ஆகிவடும்.

நான் இறைவனை வேண்டிக்கொள்கிறேன். இந்தியா ஒரு புனித பூமி. ராமர் பிறந்த நாடு. அது போல ஆகவே கூடாது.

அமெரிக்கப் பெண்மணி ராமரைப் பற்றி பேசுவது முரளிக்கு ஆச்சர்யமாக இருந்தது.

முரளி உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா?

ஆம்.

காதல் திருமணமா? தப்பா நினைக்காதீர்கள். உங்கள் நண்பனாக நினைத்து சொல்லுங்கள்.

இல்லை. இதில் தப்பாக நினைக்க என்ன இருக்கிறது. காதல் திருமணம் தான். முதலில் 6ம் வகுப்பில் அவளைப் பார்த்தேன். பிறகு 12ம் வகுப்பு வரை சேர்ந்து படித்தோம் பழகினோம். நான் 4 வருடம் இன்ஜினியரிங் படிக்க பெங்களூர் போய்விட்டேன். அவளோ திருச்சியில் பிஎஸ்ஸி படிக்க போய்விட்டாள். மீண்டும் பார்த்தபோது திருமணத்தில் முடிந்தது.

உங்கள் காதலை எப்போது சொன்னீர்கள்?

முகம் சிவக்க இன்னும் சொல்லவில்லை என்று சொன்னான் முரளி.

அப்படியா?

அவள் சொன்னாளா?

இல்லை.

அப்படியென்றால்?

சிலியா இதைப்பற்றி பேசவேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

அவள் வேறு யாரையாவது காதலித்திருந்தால்?

அவள் என்னைத்தான் காதலிக்கிறாள் என்று எனக்கு உறுதியாக தெரியும்.

அப்படியா?

இதெல்லாம் மிகப்பெரிய ஆச்சர்யமாக இருந்தது சிலியாவிற்கு. தினமும் ஐ லவ் யூ சொன்னால் தான் பல திருமணங்கள் விவாகரத்தில் முடியாமல் இருக்கின்றது என்பது அமெரிக்க நம்பிக்கை.

இங்கோ 16 வருட காதல். ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொள்ளவில்லை.

நான் உங்கள் மனைவியை பார்க்கலாமா?

ஓ தாராளமாக. இன்னும் கேட்டால் இன்று இரவு எங்கள் வீட்டில் தான் உங்களுக்கு விருந்து. நான் 8.30 மணிக்கு உங்களை அழைத்து செல்கிறேன்.

முரளி விடைபெற்று சென்ற சில மணி நேரம்வரை இந்திய அமெரிக்க கலாச்சாரங்களைப்பற்றி பேசித்தீர்த்தார்கள் தோழிகள் இருவரும்.

8.25க்கு முரளி ஆஜர். டொயோட்டா குவாலிஸ் எடுத்து

வந்திருந்தான். கோடம்பாக்கம் பாலத்தை கடந்து ஜெமினியை கடந்து சந்து பொந்துக்களில் சென்று மயிலாப்பூர் தெப்பக்குளத்தின் ஒரு இருண்ட தெருவில் வண்டியை நிறுத்தினான்.

மன்னிக்கவேண்டும். சென்னையில் மக்கள் தொகை அதிகம். இன்னும் சாலை வசதிகள் அதிகம் முன்னேறவில்லை.

ஓ கவலை வேண்டாம். நியூ யார்க்கும் இப்படித்தான் இருக்கிறது. அங்கும் தெருக்கள் சுத்தம் இல்லை. அமெரிக்காவைப் பற்றி நீங்கள் கேட்டதையெல்லாம் நம்பவேண்டாம்.

அப்படியா என்றான் முரளி ஆச்சர்யத்துடன். ஒரு முறை பயிற்சிக்காக கலிபோர்னியா சென்று வந்தான். அது நன்றாக இருந்ததாகத்தான் நினைத்தான். அமெரிக்கா பெரிய நாடு. மக்கள் தொகை உலகில் மூன்றாவது இடம். பிரச்சனைகளும் அதிகம் தான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

பழைய வீடு. சிறிய திண்ணைகள். தாழ்வாரம். குனிந்து செல்ல வேண்டிய உயரம் தான்.

இந்த திண்ணைகள் எதற்கு என்று கேட்டாள் ரீடா.

ஓ இதுவா அந்த காலத்தில் வழிபோக்கர்கள் வந்தால் உறங்கி செல்வதற்கு.

அப்படியா? யாரென்றே தெரியாமல் உங்கள் வீட்டில் தங்க விடுவீர்களா?

ஹா. அது அந்தக்காலம். திருட்டு பயமோ இந்த பணப்பைத்தியமோ

இல்லாத காலம். இப்போது வயதானவர்கள் உட்கார்ந்து வெட்டி பேச்சு பேசத்தான் பயன்படுகிறது.

முரளியின் அப்பா அம்மாவை பார்த்ததும் இரண்டு கை கோர்த்து வணக்கம் தெரிவித்தாள் சிலியா.

புதுமை செய்யப்பட்ட பழைய வீடு. சோபா கலர் டிவி வாஷிங் மெஷிpன் கம்ப்யூட்டர் கேபிள் டிவி.

கருப்பாக இருந்தாலும் அழகாக இருந்தாள் முரளியின் மனைவி ப்ரவீனா. கையில் ஒரு குழந்தை.

இந்திய மணத்துடன் கூடிய ஆங்கிலத்தில் 'வெல்கம்" என்றாள். அவளை அணைத்துக் கொண்டு கொண்டு வந்த பூக்களை கொடுத்தாள். அந்த குழந்தையை கையில் எடுத்துக் கொண்டு கொஞ்சினாள்.

ப்ரவீனா சமயல் அறைக்குள் நுழைந்தாள். சிலியா முரளியை பார்த்து நான் உள்ளே போகலாமா என்று கேட்டாள்.

தாராளமாக என்றான் முரளி. பிறகு ரீட்டாவை அழைத்துக் கொண்டு வீட்டை சுற்றி காட்டினான். அவள் தான் எடுத்து வந்திருந்த காமிராவை எடுத்து சில புகைப்படங்களை எடுத்தாள். தன்னுடைய குறிப்பேட்டில் ஏதோ குறித்துக் கொண்டாள்.

உள்ளே நுழைந்து சிலியா ப்ரவீனாவைப்பார்த்து 'நீங்கள் காதல் திருமணம் புரிந்துக் கொண்டீர்களா? என்றாள்.

இந்த கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத ப்ரவீனா வெட்கத்தில் முகம்

சிவந்து ஆம் என்றாள்.

யார் முதலில் காதலை சொன்னது?

யாரும் இல்லை.

யாரும் இல்லை? முரளி வேறு யாரையாவது காதலித்திருந்தால்?

இல்லை. முடியாது.

எப்படி?

விழுப்புரம் சின்ன ஊர். என் தோழிகளில் யார் எங்களுடைய ஆள் என்று பேசிக்கொள்வோம். அதில் யாரும் முரளியை பார்க்கவில்லை. பிறகு அவர் செல்ல ஹிந்தி க்ளாஸ் பாட்டு க்ளாஸ் இல்லையென்றால் கோவில். இதில் எல்லா இடத்திலும் நான் இருந்தேன். இன்னும் கேட்டால் நான் இருந்ததால் தான் அவர் வந்து சேர்ந்தார். என்னைப் பார்க்கவே தினமும் முன்னதாக வந்துவிடுவார்.

பிறகு கல்லூரி. காதல் வந்தால் கல்லூரியில் வேறு யாரையும் பார்க்க முடியாது. அதனால் கல்லூரியில் அவர் யாரையும் காதலித்திருக்க முடியாது. என்னுடைய தோழியும் அவர் படித்த கல்லூரியில் தான் படித்தாள். அதனால் அவரைப்பற்றி தகவல் வந்து கொண்டே இருக்கும்.

கண்களை அகலமாக்கிக் கொண்டே இந்த கதையெல்லாம் கேட்டாள் சிலியா.

பிறகு எப்போது திருமண பேச்சு நடந்தது?

நாங்கள் இருவரும் என்னுடைய தோழியின் திருமணத்தில் சந்தித்துக் கொண்டோம். எங்கள் இருவரையும் வருபவர்களை வரவேற்பதற்காக வெளியே நிறுத்தி விட்டார்கள். சில மணி நேரம் பேசாமல் இருந்தோம். பிறகு என்னைப்பார்த்து நம் கல்யாணத்தில் யாரை வரவேற்பில் நிறுத்தலாம் என்று கேட்டார்.

நம் கல்யாணமா? எப்போ என்று கேட்டேன்.

அடுத்த மாதம் என்றார்.

அவர் சொன்னது போல அதற்கு அடுத்த மாதமே திருமணம் நடந்தது.

என்ன சொல்கிறாய். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு முறை கூட நீங்கள் சேர்ந்து வெளியே செல்லவில்லையா? சினிமா பார் என்று எங்குமே?

நீங்கள் உங்கள் விருப்ப வெறுப்பை பற்றி எதிர்காலத்தைப்பற்றி இப்படி எதுவுமே பேசாமல் எப்படி?

சிலியா. நீங்கள் அமெரிக்கர். உங்களுக்கு இதெல்லாம் ஆச்சர்யமாக இருக்கும். ஒரு சராசரி இந்திய பெண்ணுக்கு இன்னும் சொல்லப்போனால் தமிழ் பெண்ணுக்கு தனக்கு கணவனாக வருபவன் புகைப்பிடிப்பவனா குடிப்பவனா என்பதைவிட தன்னை மட்டுமே நினைப்பவனாக தனக்கு உரியவனாக இருக்கவேண்டும் என்றே நினைக்கிறாள். அப்படி பார்த்தால் முரளி என்னை முதல் நாள் பார்த்திலிருந்து இன்று வரை வேறு யாரையும் பார்த்ததில்லை.

முரளி ப்ரவீனாவின் காதல் கதையில் லயித்துபோனாள். பிறகு அவர்கள் டைனிங் டேபிளில் அமரச்சொன்னாலும் கேட்காமல் தரையில் அமர்ந்து அவர்களுடன் உணவு உண்டு ஒரே கோலாகலம் தான்.

முரளியின் பெற்றோருக்கு சிலியாவை மிகவும் பிடித்துவிட்டது. முரளியின் அம்மா அவள் நெற்றியில் பொட்டுவைத்தாள். உனக்கு நல்ல கணவன் கிடைப்பான் என்றாள்.

அதை முரளி மெழி பெயர்த்தான். அதை கேட்டதும் சிலியா மகிழ்ச்சியின் உச்சத்தை அடைந்தாள். முரளியின் அம்மாவின் மெலிந்த கைகளுக்கு முத்தமிட்டாள்.

பிறகு ஒரு பிரியா விடை பெற்று சென்றாள். முரளி அவர்களை இறக்கி விட்ட மறுநாள் கிருஷ்ணனுடன் வருவதாக உறுதி கூறி விடைப் பெற்றான்.

சுமார் 11 மணி இருக்கும். நியூ ஜெர்ஸியில் மதியம் 2 மணி. ராஜ் உன்னுடைய நண்பன் முரளி ஒரு ஜெம். அவனுடைய மனைவி ப்ரவீனா வாட் அ வொன்டர்ஃபுல் கெர்ல் ஷி இஸ். ஒரு அழகான குடும்பத்தை சந்திக்கும் வாய்ப்பு தந்ததற்கு மிகவும் நன்றி. நாமும் அவர்களை போல ஒரு அழகான தம்பதியாவோமா?

இரண்டு நாளில் அவள் குரலை கேட்காமல் ஏங்கிபோயிருந்த ராஜ்க்கு அவளுடைய பேச்சு உற்சாகமூட்டியது. நிச்சயமாக பெண்ணே!. நீ போய் எங்க அப்பா அம்மாவை இம்பிரஸ் செய் என்றான் ஆனந்தமாக.

## 11

கிருஷ்ணன் உயரமாக ஸ்மார்டாக இருப்பான். பேச்சிலும் ஸ்மார்ட் தான். ராஜகோபால் அவர்களுடைய உறவைப் பற்றி ஏதும் சொல்லாவிட்டாலும் சிலியாவின் பேச்சிலேயே விஷயத்தை கண்டுபிடித்துவிட்டான்.

முரளி ரீட்டா சிலியா கிருஷ்ணன் ராஜு இவர்களை ஏற்றிக் கொண்டு டெயோட்டா குவாலிஸில் விழுப்புரம் நோக்கி சென்றது.
Are you in love with Raj?

Well. Not really. mm. Yes, yes Krish. I am in love with Raj.
முரளிக்கே அது புது செய்தியாக இருந்தது. காயத்ரியை அவள் பார்க்க வேண்டும் என்றபோதே சற்று சந்தேகமாக இருந்தது. இப்போது உறுதியாகிவிட்டது.

ராஜு சிலியாவிடம் நீங்கள் ஒரு நல்ல பெண்மணி. ராஜகோபால் மிகவும் அதிர்ஷ்டசாலிதான். ஆனால் அவன் குடும்பம் மிகவும் கன்ஸர்வேடிவ். எப்படி உங்கள் திருமணம் நடக்கும் என்பது தான் எங்களுக்கு ஆவலாக இருக்கிறது. அவன் தன் குடும்பத்தை எக்காரணம் கொண்டும் விடமாட்டானே?

ஆம். ராஜு. நானும் அவன் தன் குடும்பத்தை எதிர்த்து என்னை திருமணம் புரிவதை விரும்பவில்லை. நான் இன்னும் தொலை தூரம் செல்ல வேண்டும். உங்கள் அனைவரது உதவியும் தேவை எனக்கு. கிருஷ்ணன் நீங்கள் பள்ளிப்பருவத்தில் நந்தினிக்கு லவ் லெட்டர் கொடுத்த கதையை எங்களுக்கு சொல்லுங்களேன்.

அடப்பாவி நம்ம எல்லோருடைய கதையும் இவளுக்கு

சொல்லிட்டான் போலிருக்கேடா என்றான் கிருஷ்ணன்.

அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர். இப்படியாக மூன்று மணி நேரம் பழைய கதைகளை பேசி கழித்தனர். கிருஷ்ணன் நந்தினிக்கு கடிதம் கொடுத்து ராஜூ பெண்ணாக வேடம் போட்டு நாடகத்தில் நடித்தது கவிதை எழுதியது சிவா ரத்தத்தால் காதல் ஓவியம் வரைந்தது முரளி ப்ரவீனாவை நினைத்து கவிதைகள் எழுதி தள்ளியது அனைவரும் சேர்ந்து பெண்களை சைட் அடிக்கவே ஹிந்தி க்ளாஸ் சேர்ந்தது ராஜகோபால் புது சைக்கிளை உடைத்துவிட்டு அவன் தந்தையிடம் பெல்டால் அடி வாங்கியது. ஒரு கதையும் பாக்கி இல்லை.

இரவு 10 மணிக்கு போய் சேர்ந்தனர்.

*டேய் அவங்களை நம்ம வீட்ல எப்படிடா தங்க வைக்கிறது?*

*அப்பா அது தான் மூனு ரூம் இருக்கே.*

*அது சரிடா. நாம மடி ஆசாரமானவங்க.*

*அப்பா அவங்களும் சைவம் தான்.*

*என்னடா சொல்றே. அமெரிக்கர்கள் எப்படிடா சைவமா இருக்க முடியும்.*

*அப்பா சில மாசம் தானேப்பா. ஏதோ ஆராய்ச்சிக்காக வந்திருக்காங்க. அதுக்கு பணமும் கொடுக்கறாங்க.*

*அதில்லைடா. உங்கம்மா ஏதோ லட்சுமி பூஜை பண்றா. வீடு சுத்த*

பத்தமா இருக்கனும்.

ஒன்னும் ப்ரச்சினை இருக்காதுப்பா.

ஆமா யார் இவங்க.

என் பாஸூக்கு தெரிஞ்சவங்க.

உனக்கு தெரிஞ்சவங்களா?

நான் பார்த்ததில்லை. ஆனா ரொம்ப நல்ல மாதிரி.

இல்லைடா. கல்யாணம் ஆகாத இரண்டு பொண்ணுங்க அதுவும் வெளிநாட்டு பொண்ணுங்க ஏதாவது ஏடாக்கூடமா ஆச்சுன்னா? உனக்கு இன்னும் கல்யாணம் வேற ஆகலை. ஏதாவது பேச்சு வந்திடக்கூடாது.

அப்பா ஏதாவது பிரச்சினை வந்தா வெளியே அனுப்பிடுங்க. விழுப்புரத்தில நல்ல ஓட்டல் கூட இல்லை. எங்க தங்க வைக்கிறது அவங்களை?

சரி. வரட்டும். நீ வாரம் ஒரு முறை போன் பண்ணிடு.

சரிப்பா. அவங்களை நல்லா பாத்துக்கோங்க.

அவர்கள் வண்டி வந்து பாரதி நகர் விழுப்புரத்தில் நின்றது.

வாடா கிருஷ்ணா ராஜூ எங்கே இந்தப்பக்கமே வரதில்லை. ராஜகோபால் இல்லைன்னா யார் வர்றீங்க.

இல்லை மாமா வேலை ரொம்ப பிஸி.

ஆமா பெரிய ஆளுங்களாயிட்டீங்கப்பா.

இல்லை மாமா என்று வழிந்துக் கொண்டே உள்ளே கொண்டு வைத்தார்கள் ரீட்டா சிலியாவின் பைகளை.

வெல்கம் யங் லேடீஸ் என்று ராஜகோபாலின் அப்பா கலக்கினார். ராஜகோபாலின் அம்மாவும் அவருக்கு தெரிந்த ஆங்கலத்தில் கம் இன்ஸைட் என்று ஒரு போடு போட்டார்.

முரளி, மாமி நல்லா இருக்கீங்களா? என் குழந்தையை பார்க்க கூட நீங்கள் வரவில்லை. இதோ இருக்கு மெட்ராஸ் என்றான் செல்லக் கோபத்தில்.

எங்கப்பா நாங்க எங்க போறது. நீங்கள் வந்தால் நல்லா இருக்கும். ஒரு எட்டு குழந்தையையும் ப்ரவீனாவையும் அழைச்சிகிட்டு வரலாம்ல!

சரி மாமி. நான் போய் கிருஷ்ணன் ராஜு இவங்களை விட்டுட்டு வரேன் என்று சொல்லிவிட்டு முரளி கிளம்பினான்.

மாடியில் பின்புறம் கொல்லை பார்த்தவாறு இருக்கும் படுக்கையறை சிலியாவிற்கும் முன்புறம் பார்த்தவாறு இருக்கும் அறை ரீடாவுக்கும் கீழ் படுக்கையறை வழக்கப்படி ராஜின் பெற்றோர்க்கும் என்று முடிவானது. முரளி இன்று மட்டும் இருப்பான் என்பதால் அவனுக்கு சோபா தான் படுக்கை என்று முடிவானது.

முரளி எப்போது வந்தாலும் சோபாவில் தான். இரவு முழுவதும் டிவி ஓடிக் கொண்டே இருக்கவேண்டும் அவனுக்கு. ஒன்றும்

இல்லாவிட்டால் கூட டெலிஷாப்பிங்கில் உடம்பு இளைக்கும் பெல்ட் எப்படி என்று பார்த்து கொண்டிருப்பான்.

சிலியாவுக்கு கிடைத்த அறை ராஜகோபாலுடையது. அவனுக்கு எழுந்தவுடன் சூரியனை பார்க்கவேண்டும். பிறகு துளசி மாடத்தை நோக்கி ஒரு கும்பிடு. அனைத்தும் அறிந்திருந்தாள் சிலியா. அவள் ஒரு இனம் புரியாத கிளர்ச்சியில் இருந்தாள்.

அவனுடைய அறை நியூ ஜெர்ஸியில் அவனுடைய வீட்டை விட அழகாக இருந்தது. அவனுடைய தந்தை அவன் சிறு வயதிலிருந்து உபயோகப்படுத்திய புத்தகம் துணிமணி விளையாட்டு பொருட்கள் முதல் அனைத்தையும் வயது வாரியாக அடுக்கி வைத்திருந்ததை கண்டு மிகவும் ஆச்சர்யமானாள்.

தேடிப்பிடித்து அவனுடைய டைரியை எடுத்தாள். புரட்டி புரட்டி படித்தாள். அவளுக்கு 24 மணி நேர பயணமோ இல்லை சென்னையிலிருந்து 3 மணி நேர பயணமோ ஒரு களைப்பை தரவில்லை. இமாலயத்தை ஏறியவர் களைப்படைவதுண்டா?

July 16, 2005
Leaving for the US. What's in store for me there?

June 1, 2005
Encountered a chaotic person in life. What difference it makes for somebody what they do to achieve fame and fortune? For me, yes methodology makes a difference too.

January 1, 2005
This year is for a change. Let me mark this year as "Year of Changes"

December 31, 2004
My friends forced me to drink beer during the new year celebrations. I don't want to lose my consciousness and nothing can affect my firmness.

Guys the pleasure is a perception of mind. I can derive whatever pleasure
I want without these external influences. For a cleaner society everybody
should quit smoking. For a safer society people should quit alcohol.

March 13, 2003
Miss G tried to hold my hand today. I need to tell her, I am not for this baby. I felt bad. But I couldn't avoid it. She is after every guy in the office. What makes girls run behind men? or vice versa. Are they searching for partners for life or partners in sex. I really wonder what is
the big difference in sleeping with a prostitute and a woman who is lusty.
Will she wait for me forever? She can't. She will now go after somebody
else.

இன்னும் பல டைரிகள். ஒன்று விடாமல் படிக்கப் போகிறேன் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். எல்லா விஷயங்களைப் பற்றியும் எழுதியிருந்தான். பள்ளிக்கூடத்தில் நடந்தது கல்லூரியில் நடந்தது அலுவலகத்தில் நடந்தது டிவியில் பார்த்தது வானொலியில் கேட்டது அரசியில் பொருளாதாரம் கணிப்பொறி என்று ஒரு அகராதியே இருந்தது.

பிறகு அவனுடைய விளையாட்டுப் பொருட்கள். ஒன்று கூட உடையாத நிலையில்.

தூக்கம் கண்களை சொக்க உறங்கச் சென்றாள்.

மச்சான் ராஜ் விவகாரம் கேட்கவே த்ரில்லிங்கா இல்லை? - முரளி.

இது ஏதோ வம்புல போய் முடியப்போகுது. – கிருஷ்ணன்.

வெளிநாட்டுப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதுல என்னடா

தப்பிருக்கு? இது ஒன்னும் புதுசு இல்லையே? - ராஜூ.

மச்சான் எந்த ஒரு புரட்சியும் நம்ம வீட்டில நடந்தாதான் அதிர்ச்சியா இருக்கும். இவனுக்கு என்ன மர கழண்டு போச்சா. நம்ம ஊர்லே பொண்ணா இல்லை? அந்த வாத்தியார் பொண்ணு லட்சுமி இன்னும் இவன் மேல பைத்தியமா இருக்கா. இதுவரை 7 வரன்களை தட்டி கழிச்சிட்டா. நான் எப்ப போனாலும் ராஜகோபாலை பத்தித்தான் பேச்சே. அவளுக்கு என்ன குறைச்சல். நல்ல பொண்ணு.

முரளி நம்மளை யாரு லவ் பண்றாங்கறது முக்கியம் இல்லைடா. நாம யாரை லவ் பண்றோம் அது தான் முக்கியம். நான் சைட் அடிக்காத பொண்ணே இல்லை. ஆனால நான் அரேஞ் மேரெஜ் செஞ்சி சந்தோஷமா இல்லையா?

ராஜ் கல்யாணம் மட்டும் நடந்தது நான் ரீடாவோட ஒதுங்கிடுவேன். செம கட்டைடா மச்சி - கிருஷ்ணன்.

டேய் இவனைப் பாத்தியா நிச்சயதார்த்தம் ஆனவன் மாதிரி பேசறானா? இரு சுருதிக்கு போன் போட்டு சொல்றேன். - முரளி.

டேய் நீ வேற. சும்மா தமாஷ் பண்ணேன்டா. சுருதிகிட்ட சொல்லி என்னை வம்புல மாட்டாதே.

இவ்வாறாக கதை அடித்துவிட்டு காமராஜ் சாலையோரு கடையில் மசாலா பால் குடித்துவிட்டு ஒவ்வொருவரையும் இறக்கிவிட்டு ராஜகோபாலின் வீடு வந்து சேர்ந்தான். முன்பே சாவி எடுத்துக் கொண்டு சென்றதால் நேராக கதவை திறந்து கொண்டு

வைத்திருந்து வேட்டியை கட்டிக் கொண்டு டிவியை துவக்கிவிட்டு சோபாவில் படுத்துக் கொண்டான்.

*இந்த முரளி பையனோட சேர்ந்து நீ கெட்டு குட்டிச்சுவரா ஆகப்போறே!. - ஒரு நாள் முரளி அவன் வீட்டில் நுழையும் போது ராஜின் அப்பா திட்டிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. பூவிழி வாசலிலே. அவர்களுடைய கல்லூரி விடுமுறையில் இந்த படத்தை பார்க்க டிக்கெட் வாங்கியிருந்தார்கள். அதற்காக கிளம்பும்போது தான் ராஜகோபாலுக்கு இந்த பாட்டு. சட்டென்று உள்ளே நுழைந்து முரளியைப் பார்த்ததும் மௌனமாகிவிட்டார் அவன் தந்தை.*

இப்போது அவன் வந்தால் ராஜ மரியாதை தான். வேட்டியும் ஒரு சொம்பில் தண்ணியும் அவர் எடுத்து வைத்திருந்தார். மாமாவுக்கு என் மேல ஒரு தனி அன்புதான் என்று நினைத்துக் கொண்டான்.

மெல்ல கண்கள் அவனை தூங்கச் சொல்ல டிவியை அணைத்துவிட்டு தூங்கச் சென்றான்.

## 12

அமெரிக்கா. உலகத்தில் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மூன்றாவது நாடு. வல்லரசு. 50 மாநிலங்கள். ஒவ்வொரு மாநிலமும் பல கவுன்டிகளாக பிரிக்கப்டுள்ளது. நகராட்சி வரி மாகாண வரி மாநில வரி மத்திய வரி என்று பல வரிகள் கட்டியே வரிகுதிரைகளாகிவிட்ட மனிதர்கள்.

1776 சுதந்திரம் பெற்ற நாடு. ஆங்கிலேய வெள்ளையர் ஆப்ரிக்க கருப்பர் தென் அமெரிக்கர் மெக்ஸிகன் இந்தியர் மத்திய கிழக்கு சீனா என்று அனைத்து நாட்டு மக்களும் இணைந்து உருவாக்கிய ஒரு நாடு.

அமெரிக்கா ஒரு சிறிய உலகம் என்று சொல்லலாம்.
நியூ ஜெர்ஸி மாநிலம் நியூ யார்க் மாநிலத்திற்கு அருகில். ஜெ எஃப் கே விமான தளத்திலிருந்து ஈஸ்ட் ப்ரன்ஸ்விக் சுமார் ஒன்றரை மணி நேர தூரம்.

நியூ யார்க் செல்ல வசதியாகவும் ஒரு அளவு செலவு குறைவாக இருப்பதாலும் பலர் இங்கிருந்து டிரெயின் பஸ் மூலம் வேலைக்கு சென்று வருகின்றனர்.

இயற்கை தன் எல்லா வரங்களையும் இங்கே தந்திருக்கிறது. கோடை காலம் மழைக்காலம் இலை உதிர் காலம் கார் காலம் குளிர்காலம் என்று நாம் படித்திருக்கலாம். ஆனால் எல்லா காலங்களும் சரியான நேரத்தில் இங்கு தான் வந்து போகிறது.

சில சமயம் இயற்கை சீற்றத்தில் காட்டுத்தீ வருவதுமுண்டு கத்ரீனா

வருவதுமுண்டு. இயற்கை இல்லாமல் செயற்கையாக மதம் பெட்ரோல் போர் என்று பல சிக்கல்களில் சிக்கித்தவிக்கும் மக்கள். கலாச்சார சீரழிவும் வேகமாகதான் நடக்கிறது.

ஆனால் ஈஸ்ட் ப்ரன்ஸ்விக் ஒரு அழகான நகரம். இயற்கை கொஞ்சும். அவென்யூ டிரைவ் புலவர்ட் என்று பல பெயர்களில் தெருவை கூறிக்கின்றனர்.

குளம் குட்டை ஏரி உயர்ந்த ஓக் மரங்கள் பசுமை எங்கெங்கும். இரண்டு பக்கம் மரங்கள் இருந்தால் அது புலவர்ட். அப்படிப்பட்ட ஒரு புலவர்டை தாண்டிப் போனால் டைலர்ஸ் அவென்யூ வரும். இப்படி பேரழகும் பேரமைதியும் கொண்டு இந்த நகரத்தில் அமைதியில்லாத ஒரே ஜீவன் ராஜகோபால் தான்.

இரண்டு நாட்களாக சிலியாவின் உடல் படாமல் தூக்கம் வரவில்லை. அவள் அருகில் இருந்தால் ஏதோ சொர்கத்தில் இருப்பது போல ஒரு மயக்கம். மனப்போராட்டங்களையும் மீறி அவளை கட்டி அணைப்பதும் அவளுடைய அழகான சிறிய நெற்றியில் அந்த தங்க கூந்தலை அகற்றி முத்தமிடுவதும் அவனுடைய வாடிக்கைகளில் ஒன்றாகிவிட்டது. 'அழகூரில் பூத்தவளே என்னை அடியோடு சாய்த்தவளே" என்று பாலசுப்ரமணியம் காதில் பாடிச் சென்றார்.

அவனால் தூங்க முடியவில்லை. செல்லும் பாதை சரியா தவறா என்று தெரியவில்லை. ஆண் உடலின் உபாதைகள் அவனை செயல்குலைந்து போகச் செய்திருந்தது.

க்ரிஸ் நாம வெளியே எங்கேயாவது போகலாமா? என்று தொலைபேசியில் கேட்டான்.

என்ன சிலியாவை மிஸ் பண்றியா?

ஆமாம். ரொம்ப டிப்ரஸ்டா இருக்கு.

கவலைப்படாதே இன்னும் இரண்டு மணிநேரத்தில் உன் வீட்டில் இருப்பேன் என்று சொல்லி தொலைபேசியை துண்டித்தான் க்ரிஸ். இரண்டு மணிநேரமாக என்ன செய்வது. விவேகானந்தரின் ராஜ யோகத்தை கையில் எடுத்தான். ஒரு வரிகூட அவனால் படிக்க முடியவில்லை.

டேப்ரிக்கார்டரில் கந்த சஷ்டி கவசம் போட்டான். கண்ணை மூடிக் கொண்டு கூடவே பாடினான். பாடிக்கொண்டே வந்தவன்

*வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க*
*சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க*
*நாணாங் கயிற்றை நல்வேல் காக்க*
*ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க*
*பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க*

என்ற வரிகள் வந்ததும் அழுதே விட்டான். அவனுடைய கோட்பாடுகளும் கட்டுப்பாடுகளும் தூள் தூள் ஆவதை பார்த்தான். டயரியை எடுத்து

Who defines sexual boundaries? What is right and what is wrong in sex?
Can anybody sleep with anybody? Is it all fake when we say we love a soul and not the body?
Will my frustration be solved by any woman?

Do I love Ceilia? Or I just want her body?

Help me God to make a decision.

கிறுக்கலாக எழுதிவிட்டு தூக்கி எறிந்தான் டயரியை.

*காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்*
*கந்தா குகனே கதிர்வே லவனே*
*கார்த்திகை மைந்தா கடம்ப கடம்பனை*
*இடும்பனை யழித்த இனியவேல் முருகா*
*தணிகா சலனே சங்கரன் புதல்வா*

சிலியா நீ எங்கிருக்கிறாய்?

*பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே*
*பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து*
*மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்*
*தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்*
*கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய*

நான் உன்னை காதலிக்கிறேனா?

*மயில்நட மிடுவோய் மலரடி சரணம்*
*சரணம் சரணம் சரவண பவஓம்*
*சரணம் சரணம் சண்முகா சரணம்*
*சரணம் சரணம் சண்முகா சரணம்*

Yes. I love you.

எழுந்து முகத்தை துடைத்துக் கொண்டான். தலை சீவி தயாரானான். க்ரிஸ் வந்து இவனை ஸ்டார் ஸ்டீக் பாருக்கு அழைத்துச் சென்றான்.

ஒன் ஹெனிக்கன். ஒன் டயட் கோக். என்று பணிப்பெண்ணிடம் சொல்லிவிட்டு 'சொல்லு ராஜ் என்ன ப்ராப்ளம் உனக்கு?"

நான் சிலியாவை காதலிக்கிறேன் என்று நினைக்கிறேன்.

ஓ இது நல்ல விஷயம் தானே. அவளிடம் சொல்லிவிட்டாயே!

சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவளுக்கு தெரியும்.

அவள் சரியென்று சொல்லிவிட்டாளா?

ஆம் என்று தலையாட்டினான்.

ஓ அப்படின்னா பார்டிதான்.

இல்லை க்ரிஸ் பிரச்சனை அதுவில்லை.

பின்?

எங்க வீட்டை எதிர்த்து நான் அவளை கல்யாணம் செய்து கொள்ள முடியாது. என் ரத்தத்தில் ஊறிவிட்டது. நான் ஒர சாதாரண இந்தியன். என் அப்பா அம்மா அக்கா தம்பி அனைவரும் வேண்டும். அவர்களை விட்டு என்னால் எங்கும் போகமுடியாது.

வீட்டில் பேசிப்பாரேன்.

இல்லை. தொலைபேசியில் பேசினால் பெரிய பிரச்சனையாகிடும்.

ஒரு வாரம் விடுப்பில் சென்று பேசி விட்டு வா!

இது நடக்குமா என்றே தெரியவில்லை க்ரிஸ். நான் அநாவசியமாக

குழம்பி சிலியாவை குழப்புகிறேன் என்று தோன்றுகிறது. எனக்காக அவள் என் வீட்டாரை சந்திக்க போயிருக்கிறாள்.

ஓஹோ இத்தனை நடந்திருக்கிறதா? அது தான் அவள் ஆராய்ச்சி என்று இந்தியா போயிருக்கிறாளா? ஏய் நீங்கள் இரண்டு பேரும் என்னிடம் மறைத்திவிட்டீர்களே என்று கோபித்துக் கொண்டான்.

ஹேய் க்ரிஸ் வாட்ஸ்ஸப் மேன் என்று ஒரு உருவம் வந்து இவர்கள் அருகில் அமர்ந்தது. பார்த்தவுடனேயே இந்தியன் என்று தெரிந்தது. கருப்பு நிற டி ஷர்ட் அதன் மேல் ஒரு ஜாக்கெட் கருப்பு நிற ஜீன்ஸ் ஒரு கவ் பாய் தொப்பி கையில் புகைந்து கொண்டிருந்த சுருட்டு ஒரு பெரிய க்ளாஸில் மாலிபு. ஒரு பத்து ரவுண்டு அடித்தவன் போல் மிதப்பில் இருந்தான்.

ஹேய் நாரி. திஸ் ஈஸ் ராஜ்.

ராஜ்?

ராஜகோபால் என்று சொல்லி கைகொடுத்தான் ராஜ்.

தமிழா? ஐயங்காரா? என்று தடாலடியாக சொல்லிக் கொண்டே கை கொடுத்தான். இவனைவிட ஒரு ஐந்து வயது அதிகம் இருக்கும்.

நீங்க நாரி?

நாரியாவது. பூரியாவது. நரசிம்மன்-பா. இவங்க வாயில நுழையுமா? அதனால நாரி. அப்புறம் எத்தனை வருஷமா யூஎஸ்? க்ரீன் கார்ட் ஆச்சா? சிடிசனா?

ஹா இல்லை. இப்ப தான். முதல் வருஷம். நீங்க?

என்ன நீங்க வாங்க! கமான் மேன். நீ வா போன்னே சொல்லு. நான் இங்க சிடிசென். 10 வருஷம் ஆச்சு.

ஏய் க்ரிஸ் யூவர் இன்டியன் ஃபிரன்ட் இஸ் ஆன் கோக். ஹா ஹா நானும் வந்த புதுசுல அதுதான். இப்ப பார்த்தியா? ஊருக்கு தகுந்த மாதிரி மாறனும் பிரதர்.

ம். பரவாயில்லை என்றான் சங்கடமாய். ஒரு நிமிஷம் என்று சொல்லிவிட்டு ஆண்கள் கழிப்பறையை நோக்கி நடந்தான்.

க்ரிஸ் லெட் மி ஹாவ் ஃபன் என்று சொல்லிக் கொண்டே க்ரிஸ் தடுப்பதற்கு முன்பாக ராஜகோபாலின் கோப்பையில் சட்டென்று ஒரு பொடியை போட்டு கலந்துவிட்டான்.

க்ரிஸ் மிகவும் தர்ம சங்கடமான நிலையில். வேண்டாம் நாரி. அவனுக்கு இந்த பழக்கம் இல்லை. எதுக்கு கெடுக்கனும்.

ஹேய் க்ரிஸ் என்ன டென்ஷனாகரே? கொலையா பண்ணிட்டேன். உன் இந்திய நண்பன் சோகமாக இருக்கிறான். இதை கொடு சொர்க்கத்திற்கே போய்விடுவான்.

இரண்டு நிமிடத்தில் திரும்பிய ராஜ் சூடாகிகொண்டிருந்த கோக் கோப்பையை சட்டென்று ஒரு மடக்கில் குடித்தவிட்டு வைத்தான். என்னாகப்போகிறதோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் க்ரிஸ்.

ஒரு சில நிமிடங்களில் ராஜுக்கு தலைசுற்றியது. வாட் த ஹெல்

யூ கைஸ் ஆடட் இன் மை கோக் என்று கேட்டான்.

க்ரிஸ் நாரி இருவரும் அமைதியாக அவனைப்பபார்த்தனர்.

டிரை திஸ் என்று தன் கையிலிருந்த மாலிபு கோப்பையை அவனிடம் நீட்டினான் நாரி.

க்ரிஸ் சற்றும் எதிர்பார்க்காத விதமாக அதை எடுத்து ஒரு மடக்கில் குடித்தான் ராஜ்.

டேக் ஈட் இஸி ராஜ். முதல் முறையாக குடிப்பவர்கள் பொறுமையாக குடிக்கவேண்டும் என்ற வியாக்யானம் செய்தான் நாரி.

டு ஹெல் வித் யூ என்றுவிட்டு க்ரிஸிடம் இருந்த ஹெனிக்கனையும் எடுத்து ஒரு மடக்கில் குடித்தான். வயிற்றுக்குள் எக்ஸோனோரா வண்டி சென்றது போல ஒரு குப்பை உணர்ச்சி. எழுந்து கழிப்பறைக்கு போக அவன் முயல்வதற்கு முன் குப் என்ற வாந்தி எடுத்தான். பல பேர் சேர்ந்து மடேர் மடேர் என்று அடிப்பது போல ஒரு உணர்வு. மயங்கி கீழே விழுந்தான்.

கிழக்கு மேற்கே செல்லும் விமானத்தில் அமர்ந்துவிட்டது. அங்கோ கிழுக்கே நோக்கி போனது ஒரு மேற்கு மயில்.

விவேகானந்தர் வழுக்கிவிட்டார். ஆஞ்சனேயர் அடிபணிந்துவிட்டார்.

## 13

காலையில் எழுந்து காபி கொடுப்பதற்காக சென்ற ராஜகோபாலின் அம்மாவிற்கு ஒருஇன்ப அதிர்ச்சி. எளிமையான காட்டன் சேலையில் பச்சை நிறத்தில் அதே நிறத்தில் ப்ளவுஸ்அணிந்து தலைக்கு சடை பிண்ணி பூ வைத்து பெரிய குங்குமம் இட்டு வெள்ளை மகாலட்சுமியாககாட்சியளித்தாள் சிலியா.

நிறைய கேட்க வேண்டும் என்று தோன்றினாலும் ஆங்கிலத்தில் என்ன பேசுவது என்றகுழப்பத்தில் பங்கஜம் மாமி குட் என்றார்.

நன்றி என்று தடாலடியாக தமிழில் பதில் சொன்னாள் சிலியா.

அவர் அதிர்ச்சியை காட்டுவதற்கு முன் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தாள் சிலியா.

நல்லா இரும்மா.

கொஞ்சம் இங்கே வந்து பாருங்க என்று கணவனை அழைத்தார்.

அவரும் வந்து பார்த்துவிட்டு யூ லக் வெரி நைஸ் என்றார்.

நன்றி மாமா என்று அவருக்கும் ஒரு இன்ப அதிர்ச்சி.

அடேய் இங்கே பாரேன். நன்றி மாமா-ன்னு சொல்றா முரளி. நீ சொல்லிக் கொடுத்தியா?

இல்லை மாமா. அவங்க இங்க ஆராய்ச்சி பண்ண வர்றாங்கன்னு முன்னாடியிலிருந்தே தமிழ்கத்துகிட்டு இருக்காங்க.

பரவாயில்லை. அமெரிக்கா காராள் என்ன வேணா பண்றாள். நம்ம பசங்க இதையெல்லாம் பாத்துகத்துக்கனும்.

அவள் பங்கஜ மாமியிடம் மாமி நான் துளசி என்றுவிட்டு தமிழ் தட்டுப்பாட்டால்முரளியை பார்த்து ஐ வான்ட் டு ப்ரே துளசி என்றாள்.

அவன் அதை தமிழிலில் மொழி பெயர்க்க பேஷா பண்ணட்டும். ஆனா அவளுக்கு துளசின்னாஎன்னன்னு தெரியுமோ?

முரளி சிலியாவைப் பார்த்து உங்களுக்கு துளசி எதுக்காக கும்பிடறாங்கன்னுதெரியுமா?

[FONT='Trebuchet MS','sans-serif'] [/font]
Yes. It symobolizes purity. Women pray this to demonstrate their loyalty
to their husband and pray for their husband's long life and well being.
Tamil women prefer to die when their husbands are alive. That's ....
sugam-sugamangali.

Ha, ha. that's sumangali.

என்றான் முரளி.

'சலங்கையிட்டாள் ஒரு மாது சங்கீதம் நீ பாடு" என்று டி. ராஜேந்தர் பாலா மூலம்சென்னை வானோலியில் நிலையத்திலிருந்து பாடினார்.

மன்னிக்கனும். ஆமாம். சுமங்கலி.

என்னமா பேசறா இந்தப் பொண்ணு என்று அசந்துவிட்டார்கள் பெரியவர்இருவரும்.

பிறகு சுடச்சுட இட்லி சாப்பிட்டுவிட்டு காமகோடி பள்ளிக்கு அவளை அழைத்துச்சென்றனர் நண்பர் மூவரும். நாராயணன்ஜி அவர்களுடைய சமஸ்கிருத வாத்தியார். அவருக்குஒரு கடிதம் கொடுத்திருந்தான் ராஜ். அதில் இவர்கள் இருவரும் ஒரு ஆராய்ச்சிக்காகதமிழ் நாடு வந்திருப்பதாகவும் தமிழ் சமஸ்கிருதம் இவை இரண்டு மொழிகளையும் விரைவாககற்க விரும்புகிறார்கள் என்றும் எழுதியிருந்தான். ஆளுக்கு 200 டாலர் மாதம்தருவதாகவும் எழுதியிருந்தான். அவருக்கு வயதாகியிருந்தாலும் வெள்ளைக்கார பெண்தம்மிடம் மொழி கற்க வந்தது அவருக்கு பெருமையாக இருந்தது. பணம் அவருக்கு பெரியவிஷயமாக படவில்லை. இருந்தாலும் வேண்டாம் என்றும் சொல்லவில்லை.

பிறகு மூன்று நண்பர்களும் அந்த சிறிய பள்ளியை சுற்றிக் காட்டினர். எங்கேஉட்கார்ந்தோம் எந்த வகுப்பில் எப்போது என்ன செய்தோம் என்று மீண்டும் மலரும்நினைவுகள்.

எங்கள் கூட்டத்தில் குருன்னு ஒருபையன்.நல்ல சிவந்த நிறம். கலியபெருமாள்அகரம் எனும் பக்கத்து கிராமத்திலருந்து வரும் மாணவன். நல்ல கறுப்பு. ஒரு நாள் மழைகாரணமாக பள்ளியில் நன்றாக இருட்டிவிட்டது. அதனால் விளக்கு எரியவிட்டிருந்தனர்.மின்சாரம் போனதால் அந்த விளக்கும் இல்லாமல் நன்றாக இருட்டிவிட்டது. உடனே குருகலியபெருமாள் நீ எங்கே இருக்கே? என்று இருட்டில் தேடுவது போல அவன் கறுப்பு என்றுகிண்டல் அடித்தான்.

அதை கேட்டதும் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

கிருஷ்ணன் சிலியா ரீட்டா இருவரையும் காட்டி நீங்கள் தான் நிஜமாக சிவப்பு.இப்போது குருவை உங்கள் முன் கொண்டு வந்து நாங்கள் அவனை தேடுவதுபோல நடிக்கவேண்டும்என்று கூறினான் அனைவரும் மீண்டும் சிரித்து மகிழ்ந்தனர்.

முரளி நாம் செல்லியம்மன் கோவில் போவோமா? என்று கேட்டாள் சிலியா.

ஓ போகலாமே என்று வண்டியை எடுத்து நாப்பாளயத் தெருவை கடந்து அமைச்சார் கோவில்தெரு கடந்து மந்தக்கரை தாண்டி கமலா நகரில் நுழைந்து 5 நிமிடத்தில் செல்லியம்மன்கோவில் முன் கொண்டு வந்து வண்டியை நிறுத்தினான்.

செல்லியம்மனை முதலில் பார்ப்பவர்கள் பயந்துவிடுவார்கள். சிவப்பான ஆடை கையில்வேல் எங்கும் குங்குமம். ஆனால் அவளை உற்று பார்பவர்களுக்கு அவள் அன்பின்திருவுருமாக காட்சியளிப்பாள். நினைத்ததை கொடுக்கும் அட்சயப்பாத்திரம் அவள். பெரியகோவிலோ பெரிய சொத்தோ இல்லாத அவள் தான் விழுப்புரத்தை காக்கும் தெய்வம்.உள்ளூர் மக்களுக்கே கூட அவளின் மகிமை தெரியாது. ஆனால்கமலா நகர் வாசிகளுக்கு அவள் கூடவே இருந்த காக்கும் ஒரு காவல் தெய்வம். ஏழ்மையானதெய்வங்கள தமிழ் நாட்டில் அதிகம் உண்டு. பணக்கார தெய்வங்களை மட்டுமே வணங்க பலஇடங்கள் போய் காசு கொடுத்து கடவுள் ஆசியை பெற முயல்பவர்கள் ஒரு முறை இங்கு வந்துசெல்ல வேண்டும்.

ராஜகோபாலின் இஷ்ட தெய்வம் இந்த செல்லியம்மன். சிலியா ஒரு முறை கேட்டாள் உன்கனவில் இந்த அம்மன் அடிக்கடி வரும்

என்கிறாயே ஒரு முறை வந்த நீ சிலியாவை மறந்துவிடு என்று சொன்னால் என்னை மறந்துவிடுவாயா?

கட்டயாமாக. என் அம்மா சொன்னால் அதற்கு மறு பேச்சே கிடையாது என்றான்.

இதை கேட்டதும் தொய்ந்து போய்விட்டாலும் இந்த முறை இந்தியா செல்லும் போதுஇந்த அம்மனின் ஆசியை பெற்றுவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாள்.

சிறிய கோவில் என்பதாலோ என்னவோ இந்துக்கள் மட்டும் என்ற போர்ட் இல்லை.

செருப்பை வண்டியில் விட்டுவிட்டு அங்கிருந்த ஒரு குழாயடியில் காலைகழுவிவிட்டு மெதுவாக உள்ளே சென்றாள். நண்பர்கள் மூவரும் ரீட்டாவும் அம்மனைதரிசித்துவிட்டு வந்துவிட்டார்கள்.

கும்பல்இல்லாததால் அம்மனை அருகில் சென்று நோக்கினாள். அவள் அழகில்லயித்துவிட்டால். தான் கண்ட தெய்வங்களிலேயே இவளே சிறந்தவள். ராஜின் தெய்வம். அவன்தாய். இன்றிலிருந்து நீ எனக்கும் தாய். எக்காரணத்தை கொண்டும் என் மேல் கோபம்வேண்டாம் அம்மா. நான் அடுத்த முறை வரும் போது கணவன் மனைவியாக ராஜுடன் வர ஆசி புரிஅம்மா. அவள் கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வந்தது. அவள் ஏதோ அம்மனிடமிருந்துஉறுதியளித்தால் தான் போவேன் என்பது போல எதற்காகவோ காத்திருந்தாள்.

பல மணிநேரம் ஆனது போல இருந்தது. சட்டென்று நினைவுக்கு

வந்தவள் முகத்தைதுடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். உண்டியலில் ஒரு 5000 ரூபாய் போட்டாள். அந்தகோவிலுக்கு வருட வருமானமே அவ்வளவு இருக்கலாம். அம்மன் அவளைப் பார்த்துபுன்னகைத்தாள்.

ஹேய் யூ ஆர் கெட்டிங் எமோஷனல் என்றான் ராஜு. கிருஷ்ணன் கண்ணடித்தபடியே[FONT='Trebuchet MS','sans-serif']You were talking to the Mother about your marriage? [/font]என்றான்.

மெல்லியதா சிரித்து வெட்கப்பட்டு இந்தக்காலத்தில் இந்திய பெண்களிடம்பார்க்கமுடியாத அந்த அபூர்வ முகபாவனை செய்துக் கொண்டே வண்டியில் ஏறினாள்.

"அள்ளி முடிச்ச கொண்டையிலே நீ என் மனதை சொருகிவிட்ட பொன்மயிலே" குப்புசாமிபாடினார்.

பெண்கள் புடவையில் எத்துனை அழகாக இருக்கிறார்கள். அதுவும் தமிழ் பெண்கள்குங்குமம் வைத்ததும் ஒரு தெய்வீக களை வந்துவிடுகிறது. பொய்யாக கூட யாரும்வெட்கப்படுவதில்லை இக்காலத்தில். பெண்மையாக இருந்தால் ஏதோ பட்டிக்காடு என்று யாரோதவறாக சொல்லிவிட்டார்கள் பெண்களுக்கு.

ஆண்கள் புடவை அணிந்தால் நன்றாக இருக்குமா? பெண்கள் ஏன் ஜீன்ஸ் அணியவேண்டும்.

ஆண்கள் நீளமாக முடிவைத்தால் பைத்தியக்காரர் போல் இருப்பர். பெண்கள் ஏன்முடியை குறைத்துக் கொள்கிறார்கள்?

மில்லெனியம் பிறந்த பின்னே மெல்லினங்கள் உதவாது என்ற

பாடலுக்கு ஜோதிகாவாயசைத்தார்.

இந்திய சமுதாயத்தில் பெண்கள் சக்தி வாய்ந்தவர்கள். அவர்கள் வீக்கர் செக்ஸ்என்றால் அது பொய். அவர்கள் ஆண்களை பைத்தியம் அடிக்கும் அளவிற்கு சக்திபடைத்தவர்கள். பெண்கள் தங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த அறிந்தவர்கள். ஆண்கள்அவர்களிடத்தில் பகடைக்காய் ஆகிவிடுவதுண்டு.

பேருந்தில் இடிப்படுவது வேலைசெய்யும் இடத்தில் ஆண்களால் தொல்லை கற்பழிப்புஎன்று பெண்கள் பல சோதனைகளை சந்தித்தாலும் இது ஆண் வர்க்கத்தின் இயலாமயையேகாட்டுகிறது. ஆண் தன் உந்துதல்களை கட்டுபடுத்தவில்லையென்றால் அவன் தானும்பிரச்சனைக்குள்ளாகி மற்றவர்களையும் தொந்திரவு செய்கிறான்.

ஒரு மேற்கத்திய பெண் இந்திய பெண்ணாக தமிழ் பெண்ணாக மாறிக்கொண்டிருந்தாள்.

மூன்று ஆண்களும் ஆச்சர்யத்தில் வாய் பிளந்தனர்.

பிறகு பெருமாள் கோவில் செல்லவேண்டும் என்றாள்.

இந்துக்கள் மட்டும் என்று போர்டு கண்ணில் படவே சோகமானாள். ராஜூ அவள் காதில் ஏதோகிசுகிசுக்கவே கண்களில் ஒளியுடன் சரி என்று தலையாட்டினாள்.

## 14

சுமார் பதினொரு மணி இருக்கும். மண்டை கனத்து எழுந்தவனுக்கு எதிரே உட்கார்ந்து புகைபிடிக்கும் நரசிம்மன் கண்ணுக்குப்பட்டான்.

ஹேய் இது நோ ஸ்மோகிங் வீடு என்றான் காட்டமாக.

ச்சில் அவுட் மேன். இது என்ன பேச்சுலர் வீடா இல்லை கோவிலா? ஆமா மயக்கமாய் விழுந்த உன்னை யார் இங்கே அழைச்சிகிட்டு வந்ததுன்னு நினைக்கிறே? நான் தான் தெரியுமா? என்றான் நாரி.

நன்றி நாரி. எனக்கு உடம்பு சரியில்லை.

இதை குடி என்ற மாலிபுவை எடுத்து நீட்டினான்.

ஹேய் என்ன இது? என் வீட்டில் நீ புகைப்பிடிப்பதே தப்பு. இதில் குடிக்க வேற செய்யறியா?

இங்க பாரு ராஜ் நான் உன் வீட்ல தங்க வரலை. நீ அநாவசியமா ரூல் போடாதே. கண்டதை குடிச்சிட்டு வாந்தி எடுத்தே. இதை குடிச்சா சரியாயிடும்.

அவன் பேச்சை சிரமேற்று மாலிபுவை குடித்தான்.

சரி நீ சிலியா ரூமில் தூங்கு என்றான்.

சிலியாவா யாரும்மா அந்த பட்சி. பலே கில்லாடிப்பா நீ என்றான் நக்கலாக.

சிலியா என் ரூம்மேட். ஊர்ல இல்லை.

அவன் காலணியுடன் இருப்பதையும் நாரியும் காலணியுடன் இருப்பதையும் பார்த்து எதிரில் இல்லாத தாயை மேலே நோக்கி மன்னிப்புக் கேட்டான்.

அடித்து போட்டது போல தூங்கியவன் எழுந்து மணி பார்த்போது 10. தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு நாள் விடுப்பு சொன்னான். அலுவலக வரவேற்பாளர் இவனுக்கு உடம்பு சரியில்லை என்று கேட்டதும் பயந்துவிட்டாள். என்னாச்சு ராஜ்?

ஒன்றுமில்லை என்று விட்டு குளிக்கச் சென்றான்.

தொண்டையில் ஒரே எரிச்சல். கண்கள் அழுத்தியது. நேராக குளிர்சாதனப் பெட்டியை திறந்து ரொட்டி எடுத்து சுடவைத்து படேல் மார்கெட் ரெடி மேட் த்தாலை சுட வைத்து மளமளவென்று தின்று முடித்தான்.

குளித்தும் கும்பிடும் பழக்கம் இன்று விட்டுப்போனது.

அதை உணர்ந்த அவன் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. ஏதோ நினைத்துக் கொண்டு மீண்டும் உறங்கிவிட்டான்.

கதவு தட்டும் சத்தம் கேட்டதும் எழுந்து சென்று கதவை திறந்தான். நாரி கையில் சில பொட்டலங்களுடன் நின்றிருந்தான்.

க்ரிஸைவிட நாரியை பார்த்தது ஆறுதலாக இருந்தது. தமிழில் யாரிடமாவது பேசலாம் இல்லையா?

வாங்க நாரி.

வா சொல்லு.

சரி வா.

எப்படி இருக்கே.

பரவாயில்லை. தொண்டை ஒரே எரிச்சலா இருக்கு.

ஒரு விஷயம் சொல்லு. நீ சிலியாவை காதலிக்கிறாயா?

எப்படி சொல்ற?

ஒரு ராமாயண புத்தகத்தில உன் போட்ல ராஜ் இஸ் மை ராம்-னு எழுதியிருக்கா சிலியா.

ஏய் நீ ஏன் அவள் பொருட்களை எடுத்தே?

ச்சில் மேன். சொல்லு?

அவதான என்னை காதலிக்கிறா!

நீ காதலிக்கலை?

இல்லை.

நிஜமா?

சரி சரி. நானும் தான். தன் தோல்வியை ஒப்புக்கொண்டான்.

நாரியிடம் அவன் வலுவிழுந்தான்.

இரண்டு கோப்பையில் மாலிபுவை நிரப்பினான். ஒன்றை எடுத்து ராஜிடம் கொடுத்தான். பூனைப் போல் வாங்கிக் கொண்டான்.

அவனுடைய பலவீனங்கள் அவன் பலத்தை உடைத்துக் கொண்டிருந்தன. தேக்கி வைத்த வெள்ளம் போல உடைய காத்திருந்தது அவன் உணர்ச்சிகள். அவமானம் தப்பு செய்கிறோம் என்ற குற்ற உணர்ச்சி அவனை சரிபாதியா ஆக்கியிருந்தது.

சிகாரை எடுத்து பற்ற வைத்தான் நாரி. அவனால் தடுக்க முடியவில்லை. விவேகானந்தர் வெளியேறினார். ஆஞ்சனேயர் லங்கைக்கு சென்று விட்டார்.

இன்னொரு சிகாரை பற்ற வைத்து ராஜிடம் நீட்டினான்.

வேண்டாம் என்றான்.

ஓகே என்றுவிட்டு வெறுப்பேற்றுவது போல இரண்டு சிகாரையும் மாற்றி மாற்றி புகைத்தான் நாரி.

ஹே கம் ஆன் என்று விட்டு ஒன்றை மீண்டும் நீட்டினான்.

அவனுடைய வேலி மறைந்தது. எடுத்து பயத்துடன் மெதுவாக புகைத்தான். அந்த புகை அவன் உள்ளீரலில் சென்று இரத்தில் கலந்து மூளையை தொட்டது. லேசானான்.

மனிதன் தன் உணர்வை எப்போது இழக்கிறானோ அப்போது தான் அவன் தவறு செய்கிறான். அதனால் தான் பல மதங்கள் புகைப்பதையும் குடிப்பதையும் பெண்களின் நடனங்கள்

பார்ப்பதையும் தடை செய்கின்றன. சில மதங்கள் இசை கேட்பதையே தடைசெய்கின்றன். இசையில் ஒரு ஆளை மயக்கும் சக்தி இருக்கிறது. மதங்கள் மனிதனின் வாழ்வை சீர்படுத்தவே உதவுகின்றன. எந்த மதமாக இருந்தால் எவன் ஒருவன் மதத்தின் கோட்பாடுகளை ஏற்று நடக்கிறானோ அவன் பெரும்பாலும் நல்ல மனிதனாகவே வாழ்கிறான். ஆனால் மதங்களின் கூற்றுகளை தவறாக பிரசங்கம் செய்து சில மனிதர்கள் அதனால் லாபம் அடைகின்றனர்.

லெட்ஸ் கோ என்றான் நாரி.

வேர்?

வா சொல்றேன் என்று அவனை இழுத்துக் கொண்டு காருக்கு சென்றான். 15 நிமிடங்களில் கோ பேபி கோ என்ற விளக்குகளின் வெள்ளப்பெருக்கான ஒரு இடத்திற்கு அழைத்து வந்தான்.

உள்ளே சென்றால் ஒரே கூட்டம். ஆண்களும் பெண்களும் அரை நிர்வாணமாய். உடை என்ற வார்த்தை இங்கே கெட்ட வார்த்தை.

வேண்டாம் நாரி. இங்கேல்லாம் நான் வந்ததில்லை.

ஹேய். நீ எந்த பெண்ணோடும் உடல் உறவு வைத்துக் கொள்ள வேண்டாம். சும்மா வா. உட்கார்ந்து பேசு. கை போடு. முத்தம் கொடு. அப்புறம் டான்ஸ் ஆடு. உன் கற்ப்பு ஒன்னும் கெட்டுப் போயிடாது.

நொடிகளில் அங்கிருந்த கூட்டத்தில் கலந்து விட்டான் நாரி. ஒன்றும் புரியாமல் ராஜ் ஒரு மூலையில் சென்று அமர்ந்தான். விடுதி பட்டியலை எடுத்து பார்த்தவனுக்கு இதுவரை கேள்விப்படாத

உருப்படியாக இருந்தது அனைத்தும்.

ப்ளீஸ் பிரிங் மீ எனிதிங் வெஜிடேரியன் என்றான்.

ஒன்லி பிரெஞ்ச் ஃபிரைஸ் என்றாள் அந்த மெக்ஸிகன் பெண்மணி.

ஓகே.

எனிதிங் டூ டிரிங்.

இந்த கேள்வி வரும் என்று பயந்து கொண்டிருந்தான்.

'இந்நாளிலே சங்கீதமும் சந்தோஷமும் ஒன்றானதே.உள்ளம் பாமாலை பாடுதே- வேண்டாத நேரத்தில் இந்த பாலா".

எனிதிங் லைட்?

பீயர்?

ஓகே என்றான்.

சிறிய கால்சட்டையும் அதைவிட சிறிய மேல்சட்டையும் அணிந்த ஒரு பெண் வந்து அவனருகில் அமர்ந்தாள்.

வில் யூ பை மி அ டிரிங்?

அவன் சங்கடமாக ஓகே டூ பீயர்ஸ் என்றான்.

அவனருகில் அமர்ந்த அந்த பெண். டாக் டூ மி என்றாள் ஒரு காமப்பார்வையுடன்.

ப்ரியா சிலியா காயத்ரி என்று அனைவரும் கண் முன் வந்து

சென்றனர்.

*டேய். அதிர்ஷ்டக்காரன்டா நீ. இன்னிக்கு ஹிந்தி க்ளாஸில் ப்ரியா உன் பக்கத்தில உட்கார்ந்திருந்தாளாமே! - கிருஷ்ணன்*

*நான் சொல்றதை நீ என் இடத்தில இருந்து யோசிச்சிப்பார்த்தா உனக்கு தெரியும் - அப்பா.*

என் இடுப்பு ஓரமா இருக்குதய்யா காரமா நண்டு நீயும் புடிச்சிட்டா எடுத்துகய்யா தாராளமா என்று த்ரிஷா ஆங்கிலத்தில் பாடினாள் எதிரே.

அவள் நாற்காலியை இன்னும் அருகாமையில் இழுத்தாள். அவன் கையை எடுத்து அவள் தொடை மீது வைத்துக் கொண்டாள். அவன் வழுக்கினான். அவள் இவனை அணைத்தாள் முத்தமிட்டாள். அவனுடைய ஆண்மையின் சின்னங்களுடன் விளையாடினாள். ராஜ் ராபர்டாகி கொண்டிருந்தான்.

# 15

வெங்கடாச்சாரி பொறுமையாக ராஜுவிடம் சொன்னார். அம்பி உனக்கு தெரியாதா? அவா வேற மதம். நம்ம கோவிலோட புனிதத்துவம் கெட்டுவிடக்கூடாதில்லையா? புடவை கட்டினா நம்ம ஊரு பொண்ணாயிடுமா?

சிலியா அவர் காலில் விழுந்தாள். எழுந்து கைகூப்பிக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு

*ஸுக்லாம் பரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம் சதுர்புஜம்*
*ப்ரஸன்ன வதநம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே*

.....................

*ஆர்தா விஷண்ணா ஸிதிலாஸச பீதா*
*கோரேஷு ச வ்யாதிஷ வர்த்தமாநா*
*ஸங்கீர்தய நாராயண ஸப்த மாத்ரம்*
*விமுக்த துகா ஸுகினோ பவந்து*

என்று மூச்சுவிடாமல் சொல்லி முடித்தாள்.

ராஜு கிருஷ்ணனைப்பார்த்து பாத்தியா நம்ம டிரெயினிங்கை என்றான். ஒரு மாசத்திலே என்னஅருமையாக மனப்பாடம் செய்திட்டாடா!

ராஜ்-க்கா என்னவேண்டுமானாலும் செய்யத்தயாராக இருக்காடா இவ. நம்ம ஊர்ல இந்த மாதிரி பொண்ணு கிடைச்சா கோவில் வைச்சி கும்பிடுவேன்டா நான் என்றான்.

வெங்கடாச்சாரி சிலிர்த்துவிட்டார். கோவிலின் தர்மகர்த்தாவாக அவர் குடும்பம் பரம்பரையாக அந்த கோவிலை பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மா போதும். உன்னை உள்ளே விடாட்டா அந்த பெருமாள் என்னை மன்னிக்க மாட்டார். உள்ளே போய் தரிசனம் செஞ்சிட்டு வா என்று வழிவிட்டார்.

அடுத்த மூன்று நாட்கள் கோவிலில் வருபவர்களுக்கெல்லாம் பிரசாதத்துடன் சிலியாவின் புராணம் தான்.

தன் புத்தகத்தை எடுத்து நவராத்திரியில் என்னவெல்லாம் செய்வார்கள் என்று குறித்துக் கொண்டாள். விழுப்புரத்தின் சிறப்பே லட்சதீபம் தான். அதுவும் கோடையில் வருவதால் அனைவருக்கும் லட்சதீபம் ஒரு மறக்கமுடியாத அனுபவம் தான். தெருவோரம் கடைகள். திருவிழா.ஆஞ்சனேயர் கோவில் குளம் முழுக்க விளக்குகள்.

கணேச சதுர்த்தி அன்று என்ன செய்யவேண்டும் என்று விவரமாக குறித்துக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்த ராஜ்-க்கு தான் ஏதோ தப்பு செய்துவிட்டோம் என்று தோன்றியது. உடனே வீட்டிற்கு போன் செய்தான்.

போனை எடுத்த அம்மா அவன் குரலில் இருக்கும் தொணியை புரிந்துக் கொண்டு என்னப்பா உடம்பு சரியில்லையா? என்றாள் வாஞ்சையுடனம். தாயுக்கும் பிள்ளைக்கும் ஒரு டெலிபதி.

இல்லைம்மா. ரொம்ப ராத்திரி. அதனால தூக்கம் வருது அவ்வளவுதான். உங்களையெல்லாம் பார்க்கனும் போல இருக்கும்மா? என்றான். இன்னும் பேசினால் அழுதுவிடுவான் போலிருந்தது.

வாயேன்பா. எங்களுக்கு நீ இல்லாம ஏதோ மாதிரிதான் இருக்கு. என்ன சம்பாதிச்சி என்ன ப்ரயோஜனம். கூப்பிட்டா வர்ற தூரத்திலையா நீ வேலை செய்யறே?

அம்மா அந்த வெள்ளைக்கார பெண்கள் எப்படி இருக்காங்க?

அவனுக்கு அப்பாவிடம் பேசத் தோணவில்லை.

பேசறியா? இதோ சிந்துவை கூப்பிடறேன். மீண்டும் டெலிபதி.

என்ன சிந்துவா?

ஆமான்டா. நான் அவளுக்கு சிந்துன்னு பேர் வெச்சிட்டேன். என்ன பொண்ணுடா அவ. நீ சரின்னு சொன்னின்னா உனக்கு கல்யாணம் பண்ணி வெச்சிடுவேன். உங்கப்பாதான் ஒத்துக்க மாட்டார். என்னம்மா சமையல் பண்றா? கூட்டு செய்றாடா? ஸ்லேகாம் எல்லாம் ஒன்னுவிடாம சொல்றாடா. இரு கூப்பிடறேன்.

பாதி கிணறு தாண்டிவிட்டோம் என்று நினைத்தான்.

கார்டலஸ் போனை எடுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினாள் பங்கஜ மாமி.

சிலியா என்று சொன்னவனுக்கு நாதழுத்துவிட்டது. அழுதுவிட்டான்.

பேபி. வாட் ஹாப்பன்ட்? ஏன் அழுவறே ராஜ் என்றாள் அவன் அம்மா கேட்காதவாறு.

நான் உன்னை ரொம்ப மிஸ் பண்றேன். நான் எப்படி உயிரோட இருக்கேன்னு உனக்கு தெரியாது என்றான்.

லவ், உனக்காக தான் நான் இங்கே இருக்கேன். இன்னும் இரண்டு மாசத்தில உன் கிட்ட இருப்பேன். உங்க அப்பா அம்மா மிகவும் நல்லவர்கள். அவர்கள் தெய்வத்திற்கு சமமானவர்கள். அவர்களுடன் இருப்பதில் எனக்கு ஒன்றும் பிரச்சனையே இல்லை. உனக்கு ஒன்னு தெரியுமா? நான் தினமும் செல்லியம்மனை தரிசனம் செய்யறேன். நீ எனக்கு வேணும்னு மனம் உருகி கேட்கறேன் தெரியுமா?

என்ன சொல்வது என்று தெரியாமல் அழுதான் ராஜ். அவன் குற்ற உணர்ச்சி அவனை கொன்று போட்டுவிட்டது.

சீக்கிரம் வா. உடனே வா.

சரி சரி. என்ன உனக்கு என் மேலே இவ்வளவு காதல் இன்னிக்கு?

நீ வா சிலியா. வந்து என்னை பாத்துக்க. நான் தப்பா ஏதும் செஞ்சிடக்கூடாது. உன் மடியில படுத்து அழனும் போலிருக்கு.

ஹேய் என்னப்பா. ராஜ் நீ ஏன் இப்படி பேசறே. இன்னும் கொஞ்ச நாள் பொறு. ஆமா நீ அப்பாகிட்டே பேசினாயா?

இல்லை என்று சொன்னபோது தான் அவன் அப்பாவிடம் பேச மறந்ததையே நினைத்தான். கையால் மேசை மீது தட்டினான்.

மாமா உங்க பையன் என்றால் மழலை தமிழிலில்.

வர்றேன் சிந்து என்று அவன் அப்பா சொன்னது காதில் விழுந்தது.

அப்பா எப்படி இருக்கீங்க?

நல்லா இருக்கேன் பா. கண்ணுக்கு லேசர் சர்ஜரி செஞ்சிகிட்டேன். இப்ப கண்ணாடி இல்லாமலே நான் படிக்கிறேன். பட் யூ நோ வி ஓல்ட் பீப்பிள் ஹாவ் ராங் ஃபிலாஸஃபிஸ். நான் வெள்ளைக்கார பொண்ணங்க எல்லாமே தப்புன்னு நினைச்சேன். நீ அனுப்பிச்சியே சிலியா பொண்ணு என்ன தங்கமான பொண்ணு தெரியுமா? நீ பார்த்தின்னா உனக்கு புடிச்சிடும். ஐ டோன்ட் ஹாவ் எனி அப்ஜக்ஷன்ஸ். இப்ப இருக்கிற ஐயங்கார் பொண்ணுங்களை விட இந்த பொண்ணு எவ்வளவோ மேல். அவள் போட்டோ அனுப்பட்டுமா என்று கேட்டார் அப்பாவியாக.

முழு கிணறும் தாண்டிவிட்டாயடி பெண்ணே!

அப்பா அதெல்லாம் அப்புறம் பேசலாம்பா. நீங்க உடம்பை பார்த்துக்கோங்க என்று விட்டு போனை துண்டித்தான்.

காலணிகளை கழற்றிவிட்டு நடந்த நிகழ்ச்சிகளை யோசித்தான். பாட்டிலை எடுத்து ஒரு பெக் ஊற்றிக் கொண்டான். மார்ல்பரோ அவன் கையில். குற்ற உணர்ச்சியை தவிர்க்க பலர் குற்றங்கள் செய்து கொண்டே போவர்.அது ஒரு புதை மணல் போல. எழ முயற்சி செய்யாவிட்டால் உள்ளே இழுத்துக் கொண்டே போய்விடும்.

'மோகம் எனும் மாயப் பேயை கொன்று போடவேண்டும்" என்று

யேசுதாஸ் சொன்னார். ஆனால் அந்த புகை மண்டலத்தில் அவருடைய குரல் கரைந்து போனது.

அழுது அழுது அவன் கண்கள் சிவந்திருந்தது. அரைமணியில் 5 சிகரெட் புகைத்திருந்தான்.

அலமாரி தெய்வங்கள் பல நாட்களாய் காற்று படாமல் உள்ளே மூச்சடைத்து போயிருந்தனர். ஏற்றாத ஊதுவத்தி ஏற்ற காத்திருக்கும் விளக்குகள் புகை படிந்து போன நோ ஸ்மோகிங் போர்ட். நரசிம்மர் இந்த அவதாரத்தில் அசுரனை அழிக்கவில்லை. இந்த அழகிய அசுரன் அத்து மீற ஆசைப்பட்டுவிட்டான்.

கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான்
மிருகம் கொன்று மிருகம் கொன்று கடவுள் வளர்க்க பார்க்கின்றேன்
கடவுள் கொன்று உணவாய் தின்று மிருகம் மட்டும் வளர்கிறதே!
என்று நந்தகுமாரனுக்கு கமல் சொல்லிக் கொண்டிருந்தார்.

## 16

இன்னொரு சனிக்கிழமை. பெருமாள் கோவிலில் கதாகாலட்சேபம் கேட்க ராஜகோபாலின் அப்பாவும் அம்மாவும் சென்றிருந்தார்கள். சிந்து வீட்டில் இல்லை. அதனால் போகவில்லை.

ராஜூ சிந்து ரீட்டா கிருஷ்ணன் அனைவரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

வாலியை பின்னால் நின்று ராமன் கொன்றது சரியா என்ற சிந்துவின் கேள்விக்கு ராஜூ பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

சற்றே ஆர்வம் இழந்துவிட்ட ரீட்டா கிருஷ்ணன் நீங்க என் ரூமுக்கு வாங்க நான் ஒரு பேட்டி எடுக்கறேன் உங்களை என்று அவனை அழைத்துக் கொண்டு மாடிக்கு சென்றாள்.

வாலி தன் முன் நின்று யார் கொன்றாலும் எதிரியின் பலத்தில் பாதியை தானே பெறுவதாக வரம் பெற்றிருந்தான். அதனால் அவனை முன் நின்று கொல்வது அசாத்தியமான காரியம்.

ராமனுக்குமா?

ஆம்.

ராமன் கடவுள் இல்லையா?

கடவுள் தான். ஆனால் அவர் ஏற்றிருப்பது ஒரு மனித அவதாரம். மனிதனுடைய வரம்புக்கு மீறி அவர் ஏதுவும் செய்யவில்லை.

விழுப்புரத்தில் தான் ராமர் வில்லெடுத்தார் என்று சொல்கிறார்களே?

ஆம். இது வில்லு புரம். ராமர் வில்லெடுத்த ஊர். இதன் அருகில் கண்டமானடி என்ற ஊர் இருக்கிறது. அங்கு தான் அவர் மானின் காலடியை கண்டார். பிறகு மானடிப்பட்டு என்ற ஒரு இடம். இப்போது மருகி மதகடிப்பட்டு என்றாகிவிட்டது. அங்கு தான் ராமரின் அம்பு பட்டு மாரீசனாக வந்த மான் அடிப்பட்டு விழுந்தது.

அப்படியா? சரி மேலே சொல்லுங்கள் என்றாள் சிந்து.

அதனால் வாலியை பின் நின்று கொல்வது அவசியமானது. ராமர் இதை சரியென்று சொல்லவில்லை. தண்டிக்கபடவேண்டியவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் தான். எப்படி என்பது சூழ்நிலையை பொருத்திருக்கிறது.

சரி. சீதையை மட்டும் தீ குளிக்கச் சொன்னது சரியா?

இவர்கள் இவ்வாறாக பேசிக் கொண்டிருக்க மேலே ரீட்டா தன்னுடைய அழகை எத்தனை தாராளமாக காட்ட முடியுமா அத்தனை தாராளமாக காட்டிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய பேச்சும் நடத்தையும் கிருஷ்ணனை கலங்கடித்துக் கொண்டிருந்தது.

சற்றும் எதிர்பாராத விதத்தில் அவனை கட்டியணைத்தாள். அவனுடைய ஆடைகளை களைந்தாள். அவளும் பிறந்தமேனியானாள். மேற்கும் கிழக்கும் சங்கமித்தது.

ராமனும் தானே காட்டில் தனியாக இருந்தார். அவருடைய கற்பைப்பற்றி யாரும் கேட்கவில்லையா? இது ஒரு ஆணாதிக்க

கதையாகிவிட்டதே?

இல்லை சிந்து. அவள் அப்படித்தான் எல்லோரையும் கூப்பிட உத்திரவு இட்டிருந்தாள்.

இல்லை சிந்து. இந்தியாவில் பெண்கள் அடிமையாக இருப்பதாக ஒரு தவறான செய்தியை மேற்கத்திய நிருபர்களும் பத்திரிக்கையும் பரப்புகின்றன்.

இப்போது என் அம்மா கூப்பிட்டால் போதும் ஓடி போய் அவர் முன் நிற்பேன். என் மனைவியை கேட்காமல் நான் ஒரு காரியம் கூட செய்ததில்லை.

Woman's success is when she can make a man submissive to her willfully. When a man submits himself willfully either to his wife, mother or sister, he becomes that woman's slave. However, when a woman wants to get things by law or assumes a fundamental right, conflict occurs. Nothing has been achieved so far by reservation policies floated by government, special seats for ladies in the buses and trains, special quota for women in the government jobs.
India had Indira. Even Tamil nadu has a woman Chief Minister. All our neighboring countries which were once part of Greater India has, had or have women head of states. Can you say once such instance in the US?
Women in the US are struggling for their rights.
But here throughout centuries woman have dominated the proceedings.The rivers are in the name of women. We call our country as motherland.
Most of the Indians become speechless in front of their mothers or wives because of the love and affection and not because any law written on the white papers.

Its amazing என்றாள் சிந்து. நீங்கள் சொல்வது சரிதான். எங்கள் நாட்டில் இருப்பது பொய்யான ஒரு சமத்துவம். சரி நீங்கள் சொல்லுங்கள் ஏன் ராமர் தீக்குளிக்கவில்லை.

இதற்கு பல காரணங்கள் சொல்லலாம்.

ஒன்று ராமரை யாரும் சந்தேகப்படவில்லை.

இரண்டு இயற்கை ரீதியாக ஒரு பெண் செய்த தவறை கண்டுபிடிக்க இயலும் என்பதாலும் இருக்கலாம்.

மூன்றாவதாக ராமர் காட்டில் இருந்தாலும் அவர் தன்னையே காப்பாற்றிக் கொள்ளும் சக்தி படைத்தவர். ஆனால் சீதா இருந்ததோ ராவணன் என்று ராட்சஸனிடம்.

நான்காவது இது தான் நான் மிகவும் முக்கியமானதாக கருதுகிறேன். பொதுவாக ஒரு சமுதாயத்தை தினமும் சந்திக்க வேண்டியவள் ஒரு பெண்தான். அவள் தினமும் வெளியே செல்லும் போதோ இல்லை விழாக்களில் கலந்துக் கொள்ளும் போதோ மக்களை சந்திக்கிறாள். அவர்கள் முன் அவள் புனிதமானவள் என்று காட்டவே ராமர் அவளை தீக்குளிக்க சொல்லியிருக்க வேண்டும்.

எங்கள் வழக்கத்தில் வளைகாப்பு என்று ஒன்று செய்வார்கள். இது கணவன் வீட்டார் நடத்தும் ஒரு விழா. பெண் கற்பிணியாக இருக்கும் 7வது மாதம் இதை செய்வார்கள். கணவன் தன் குடும்பத்துடன் அனைவரையும் அழைத்து செய்யும் விழா. மக்களே, என் மனைவியின் வயிற்றில் வளரும் குழந்தை என்னுடையதுதான். எனக்கும் என் மனைவிக்கும் இதில் மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை உலகெங்கும் நான் தெரிவிக்கிறேன் - என்பதுதான். அவளுடைய கற்ப்பில் சந்தேகம் இருந்தால் இந்த விழா நடக்கவே நடக்காது. ஏனென்றால் அவள் கெட்ட பெயர் பெறப்போவதும் சமுதாயத்தில் இருக்கும் மற்ற பெண்களால் தான். ஆண் அவளை தள்ளி

வைத்துவிட்டு வேறு வேலை பார்க்க சென்றுவிடுவான்.

ராஜூ நீங்கள் சொல்வது மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது. எப்படி இத்தனை விஷயங்களை சேகரித்து வைத்திருக்கிறீர்கள்?

ஹா நான் சொல்வது வெறும் பத்து சதவிகிதம் தான். ராஜகோபாலை கேட்டால் 4 மணி நேரம் பேசுவான்.

ராஜூ நீங்கள் இன்னொரு விஷயம் தெரிந்துக் கொள்ளுங்கள். ராமர் பிறந்தது விழுப்புரத்தில் தான் என்றாள்.

வாட்?

ஆம். ராஜ் தான் என் ராமன் என்றாள் கண்ணடித்தபடியே.

அங்கே இரு உடல்கள் கலந்து பிரிந்திருந்தது. இவர்கள் பேச்சு சத்தம் நின்றது கேட்டதும் இருவரும் அவசரமாக ஆடை அணிந்து முகம் சரி செய்து கொண்டு கீழே இறங்கி வந்தனர்.

ராஜூவுக்கும் சிந்துவுக்கும் அவர்கள் வந்த கோலத்தை பார்த்ததுமே தெரிந்துவிட்டது. ஏதோ தப்பு நடந்திருக்கிறது.

இதைப்பற்றி யாரும் பேசவிரும்பவில்லை. அவர்கள் விடைபெற்று சென்றனர்.

சாந்தி தியேட்டர் அருகே வண்டியை நிறுத்திவிட்டு ராஜூ கிருஷ்ணா என்னடா பண்ணே? என்று கேட்டான்.

தப்பு பண்ணிட்டேன்டா. சுருதிக்கு துரோகம் பண்ணிட்டேன்டா! என்றான் குற்ற உணர்ச்சியுடன். அவன் கண்கள் கலங்கியிருந்தது.

டேய் ராஜகோபால் கொன்னுடுவான்டா நம்பளை. நம்மை நம்பித்தானே இரண்டு பொண்ணுங்களையும் அனுப்பியருக்கான்டா அவன். என்ன காரியம்டா செஞ்சிட்டே?

இல்லைடா. அவள் கட்டாயப்படுத்தி பண்ணாடா!

டேய் அவள் அமெரிக்காடா. உனக்கு எங்க போச்சு புத்தி. உனக்கு நிச்சியதார்த்தம் ஆயிடுத்து தெரியுமா? சுருதி இப்படி செஞ்சா நீ ஒத்துப்பியா?

இல்லைடா?

என்ன இல்லைடா? உனக்கு ஒரு ரூல் சுருதிக்கு ஒரு ரூலா?

என்னை மன்னிச்சிடுடா.

டேய் நான் மன்னிச்சி என்ன பிரயோஜனம். சரி விடு இந்த விஷயத்தை யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம். இனிமே ஒன்னும் வம்பு பண்ணாதே!

சரி என்று வண்டியின் பின் அமர்ந்தான்.

## 17

What the hell you were doing Rita?

I slept with him?

Whaaaat?

Yes.

Have you gone crazy? Didn't I tell you that Raj took several assurances before sending us here?

Yes.

Then how can you do this to me?

I want to carry an Indian's baby?

What the hell are you talking? Do you know Krish is already engaged to Shruthi?

Do you want to spoil their lives?

No baby, I don't want to marry Krish. I just want his baby.

Have you gone mad Rita? How can this be done?

Honey, you leave this to me. I love Krish. But I will not spoil his life. I just want his baby. That's all. Now you don't go wild. Go to sleep.

சிந்து குறுகிப் போனாள். அவள் ரீட்டாவை அழைத்து வந்ததற்காக வெட்கப்பட்டாள். ராஜிடம் என்ன சொல்வது என்று எண்ணி திணறினாள். இப்போது அவளுக்கு அழவேண்டும் என்று தோன்றியது. எப்படியாவது இந்த மாதம் தமிழ் சமஸ்கிருத பாடங்களை சீக்கிரமாக முடித்துவிட்டு கிளம்பவேண்டும் என்று முடிவு செய்தாள்.

## 18

என்னம்மா 6 மாசம் இருப்பேன்னு சொல்லிட்டு சீக்கிரமே போறே என்றாள் பங்கஜ மாமி. அவளுக்கு வீட்டின் மகாலட்சுமியே போது போல ஒரு நினைப்பு.

அவன் அப்பாவும் மிகவும் வருத்தப்பட்டார். இன்னும் கொஞ்சம் நாள் இருக்கலாமே என்றார். நிரந்தரமாக வீட்டில் மருமகளாக வைத்துக் கொள்ள அவருக்கும் ஆசைதான்.

ராஜகோபாலுக்கு வேண்டிய தின்பண்டங்கள் செய்திருந்தார் மாமி. போகும் போது பூஜையறைக்கு சென்று நமஸ்கரித்தாள் சிந்து. மாமா மாமியின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

நான் இங்கேயே இருக்க ஆசைபடறேன் மாமி என்றாள் நெகிழ்ச்சியுடன்.

ஆமான்டி செல்லம். நீ அமெரிக்கா போய் என் பையனைப் பாரு. உனக்கு கட்டாயம் பிடிக்கும். அவன் ஒரு மாணிக்கம். அவனுக்கு உன்னை பிடிச்சிட்டா கல்யாணம் உடனே. யாரு என்ன சொன்னாலும் பரவாயில்லை. மாமாவே ஓகே சொல்லிட்டாரு என்றாள் உணர்ச்சி பெருக்கில்.

மாமி ராஜகோபால் எப்படி இருந்தாலும் நான் கல்யாணம் பண்ணிக்க தயார். எனக்கு இப்படிப்பட்ட அம்மா அப்பா கிடைக்க நான் என்ன வேண்டுமானாலும் செய்யத்தயார். நான் இங்கே இருக்கனும் அதான் என் ஆசை.

கவலைப்படாதே கொழந்தே! செல்லியம்மனை வேண்டிக்கிட்டே இல்லையா அவ பாத்துப்பா. அவ யார் எது கேட்டாலும் கொடுப்பா.

முரளி குவாலிஸ் எடுத்து வந்திருந்தான். வண்டி சென்னை நோக்கி பிரயாணம் ஆனது. யாரும் பேசவில்லை. ஒரு இறுக்கம் வண்டியில்.

அவர்கள் ஊருக்கு போன பிறகு கிருஷ்ணன் சமாச்சாரத்தை முரளிக்கு சொல்லலாம் என்று விட்டுவிட்டான் ராஜு.

முரளி 'ஏன் எல்லாம் அமைதியா இருக்கீங்க. ராஜகோபாலை கல்யாணம் பண்ணிகிட்டு சிந்து இங்க தானே வரப்போறா" என்றான் கலகலப்பாக.

நான் உங்க மூன்று பேரையும் ரொம்ப மிஸ் பண்ணுவேன். நீங்கள் அவசியம் நியூ ஜெர்ஸிக்கு வரனும் என்றாள் சிந்து.

கட்டாயம்.

விமானதளத்தில் கிருஷ்ணன் தன்னுடைய சிறிய போட்டோவை ரீட்டாவிடம் கொடுத்து நமக்கு பிறக்கப்போகும் மகனுக்கோ மகளுக்கோ தன் தந்தை யாரென்று தெரிந்துக்கொள்ளும் உரிமை இருக்கிறது. அப்படி ஒரு கேள்வி வந்தால் இந்த போட்டோவை காட்டு என்று ஆங்கிலத்தில் சொன்னான். இருவரும் ஒருவரை ஒருவர் இறுக கட்டிக் கொண்டனர்.

முரளி புரியாமல் பார்த்தான்.

ராஜு அப்புறம் சொல்றேன் என்று ஜாடை காட்டினான்.

மூன்று பேரிடமும் கட்டி அணைத்து விடைபெற்றாள் சிந்து.

சிறிய காகிதத்தில் அழகான குண்டு குண்டு எழுத்தில் 'இந்த தங்கையை மறக்க வேண்டாம். இந்த காகிதம் தான் நான் உங்களுக்கு கொடுத்துப் போகும் பரிசு. அதற்கு மேல் அளவற்று அன்பை தருகிறேன்" சிலியா என்று எழுதி அடித்து சிந்து என்று எழுதியிருந்தது.

முரளி அழுதேவிட்டான். அவளை இறுக அணைத்து நெற்றியில் முத்தமிட்டு உன் கல்யாணத்தை ஓஹோவென்று நடுத்துகிறோம் இந்த மூன்று சகோதரர்களும் என்றான்.

ராஜூ சிரித்துக் கொண்டே எங்கள் ஊரில் நிறைய வரதட்சணை தரவேண்டும் தெரியுமா? எத்தனை அதிகம் அண்ணண்மார்கள் உண்டோ அத்தனை நல்லது என்றான்.

கிருஷ்ணன் ஹாவ் அ சேஃப் ஜர்னி. வி ஆர் கோயிங் டூ மிஸ் யூ போத் என்றான்.

## 19

தான் வருவதை யாரும் ராஜகோபாலுக்கு சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்தாள். திடீரென்று போய் அவனை அசத்தவேண்டும் என்று நினைத்தாள்.

விமானத்தில் அமர்ந்தவுடன் ரீட்டா ஏதோ எழுதினாள். சிந்து அதை வாங்கிபடித்தாள். பக்கங்களை புரட்டப்புரட்ட ஆவலானாள்.

I have not seen a temple as holy as Raj's house.

People here don't keep perishable things in their refrigerators. Often their refrigerators are filled with only water bottles. They cook for the day and finish the food the same day. Only they try to preserve their perishable thoughts.

Average south Indian man loves his wife often after 40 years when she has lost her youth, glamour and sex appeal. This love for his wife lasts till his last breathe. This form of love is crazy. But imaginable.

I have seen Raj's parents go together wherever they go. They don't miss
each other at all on any occasion.

I have seen Raj's father bringing small sweets, jasmine flowers when he
goes out, for his wife. He ensures that she wears the flower and eats the
sweets in front of him. What an affectionate couple?

Raj's grandmother died on August 10th 1990. His grandfather died within
2 weeks of her death. Raj's father told that his father used to stare at his

wife's photo for hours together before he died of grief. They were married for 60 years. And he was 88. What a fantastic love story this is?
Will my husband die within weeks of my death grieving for me?

I have seen from the families nearby that often men want to present their wives as fools in front of visitors. They scold their women and mock their women. But essentially it seems every major decision in their houses are the women's final words.

First time in my life I saw a man shivering while having sex. Krishnan, this sweet fellow I met didn't enjoy his sex. He was guilty. Because he was engaged to a sweet girl called Shruthi. Can our men learn something from this?

Krishnan talks a lot about Shruthi. He said he met her only for 20 minutes before the engagement and they got engaged. He says they know more about each other only after the engagement. Isn't it crazy?

Krish wants to know what will be the name of our baby. I asked him why he wants to know that. He says I have taken a oath that my first baby will have my father's name or my mother's name. Technically this is my first baby. Will you name after my parents? He asked me innocently.

We decided to settle down for Ram or Lalitha. Indians are sentimental. Emotional. But it seems the sentiments and emotions make this country survive the impacts from other cultures.

India is a populous country. But it seems babies are not born here as an alternative to Christmas turkeys. Every baby is born as a result of passionate love between a man and a woman. Unlike us where baby process is often considered irritable.

Today Raju showed me a small gold chain. He says it belongs to his mother. His father had to sell it off because of short of cash. But he retrieved it after he earned his first salary. What type of people they are?

How can such a small thing can become a focus of their lives?

Murali's wife Praveena is a wonderful lady. How its possible that
somebody has not declared their love for 16 years and still get married
to
the person they loved? Praveena talks a lot. Murali says she used to be
the chatterbox in the school. But she never spoke a word with Murali
before her marriage. WoW!

I want to carry Krish's baby. I want to bring him up with the same
emotions as an Indian's. Is it possible? We teach to dial 911 to call
police
if our parents beat us. But here in India I heard Raj's father used to
whack
Raj with a leather belt during his childhood days. But Raj still loves his
father. How its possible?

We change men in our lives as our clothes. When I saw Raj's father
has kept all of Raj's clothes, books and toys right from his first year, I
was
appalled. We revolve around money. They revolve around love.

What if my son grows-up to be an American?

America has money. But no love. India has no money. But love is
everywhere.

I know I am pregnant.

I know it’s the small Krish inside.

God Am I crazy to think Krish's marriage should break-up and he
should
marry me. No. I am sorry Shruthi. Krish is yours.

I slept with Krish for 3rd time. He is passionate with me now. After my
relationship with him I don't feel like having sex with anybody else in
my
life again.

Will my son be with me forever? I want him to be. When I hold his
hands and teach him walking; when I hold his hand walking as a faint
old lady with him!

Today Krish gave me his photograph before we left. He told me every baby has a right to know his father. If our son ever asks for his dad, tell him that its me.

Few minutes back I asked him whether he told about our relationship to Shruthi. To my surprise, he said yes. Another thing he told me astonished me. He told me that it was Shruthi who asked him to give that photograph to me. Hats off Shruthi.

ரீடா என்னை மன்னித்துவிடு. உன்னுடைய காதலும் என்னுடையது போல் புனிதமானது தான். நீ காமத்தில் செய்த களியாட்டம் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது தான் புரிகிறது.

இல்லை சிலியா. நீ நினைத்ததில் தப்பே இல்லை. இது விளையாட்டாகத்தான் ஆரம்பித்தது. ஆனால் முதல் முறையாக என்னுடன் உடலுறுவு கொண்ட கிருஷ் என்ன சொன்னான் தெரியுமா? என்று கேட்டுவிட்டு சிரித்தாள்.

என்ன? என்று கேட்டாள் ஆவலுடன்.

என்னை மன்னித்துவிடு ரீட்டா என்றான். அப்போது தான் அவன் மேல் எனக்கு காதலே ஏற்பட்டது. ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் உடலுறுவு கொண்ட பிறகு மன்னிப்பு கேட்பதை முதல் முறையாக கேள்விப்படுகிறேன். உடலுறுவில் பெண் மட்டுமே பாதிக்கப்படுகிறாள் என்று இந்தியர்கள் நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல திருமணத்திற்கு முன்பு உடலுறுவு என்பதை நினைத்துக் கூட பார்க்க பயப்படுகிறார்கள்.

ஆம் ரீட்டா. இந்த இந்தியப் பயணம் என்னைப் பொருத்தவரையில் ஒரு புனிதப்பயணம். ஊருக்கு போனதும் நான் என்னையே ராஜூக்கு தருவேன். என் உடலும் உள்ளமும் அவனுடையது.

சிலியா நான் இனி என் குழந்தைக்காக வாழப்போகிறேன்.

அதுமட்டுமல்ல இன்னொரு கிருஷ்க்காக நான் காத்திருப்பேன்.

இரு தோழிகளும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டார்கள்.

ஆண்கள் கட்டியணைத்தால் ஹோமோ செக்ஸ்ஷுவல் என்றும் பெண்கள் கட்டியணைத்தால் லெஸ்ப்பியன் என்றும் சொல்லும் சமுதாயத்திலிருந்து வந்த இரு பெண்கள் இந்தியாவிலிருந்து காதல் பாடம் கற்றுக் கொண்டு காதல் பட்டதாரிகளாய் பறந்தனர்.

## நிறைவு பகுதி

நெவார்க் ஏர்போர்டில் இறங்கி டாக்ஸி பிடித்தனர் தோழியர். நெவார்க் நகரம் நியூ யார்க் நியூ ஜெர்ஸியின் நடுவே அமைந்திருக்கும் ஒரு நகரம். ஈஸ்ட் ப்ரன்ஸ்விக் அரை மணி தூரம் தான்.

சிந்துவை இறக்கிவிட்டு டாக்ஸி ரீட்டாவை இறக்கிவிட மேலும் பயணித்தது.

தன்னிடமிருந்த சாவி போட்டு ஆவலாக கதை திறந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ராஜகோபாலின் வீடா என்று கேட்டும் அளவிற்கு குப்பை. காலணிகள் உள்ளே. மேசையின் மீது ஆஷ் டிரே. பாதி குடித்த சுருட்டுகள். சிகரெட் துண்டுகள். மாலிபு பக்கார்டி பாட்டில்கள். அதிர்ந்து போனாள்.

பைகளை உள்ளே வைத்துவிட்டு ராஜின் கட்டிலில் சென்று படுத்தாள். அவனிடமிருந்து சாராய நெடி மூக்கை துளைத்தது.

இப்போதே எழுப்பி கேட்கலாமா என்ற நினைப்பை தவிர்த்தாள்.

தூக்க கலக்கத்தில் ஹேய் சிலியா எப்போ வந்தே? என்றான்.

இப்போது தான் என்றாள் காட்டமாக.

ஏன் என்கிட்டே சொல்லலை?

நீ குடிச்சிருக்கியா ராஜ்?

ஆமாம். பேபி. உன்னை ரொம்ப மிஸ் பண்ணேன். அதான் கொஞ்சம் குடிச்சேன்.

அவள் சுக்கு நூறாக உடைந்தாள். மேல் அவனிடம் பேச விருப்பமில்லை அவளுக்கு. அமைதியாக படுத்தாள்.

அவன் இவள் மேல் தன் வலது கையை போட்டு அணைத்தான். அவள் ஒன்றும் செய்யாமல் உறங்க முயன்றாள்.

அவன் அவளுடைய கண்களில் முத்தம் இட்டான். அவனுடைய பிடிப்பை விடுவித்தாள்.

கமான் பேபி. இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறாய். லவ் மீ என்றான்.

அவன் அவளுடைய முகத்தை தன் பக்கம் இழுத்து மேல் உதட்டில் தன் உதடுகளை பதித்தான்.

பல காலமாக அவனிடமிருந்து முத்தம் கிடைக்காதா என்று ஏங்கிய அவளுக்கு இன்று அது கிடைக்கும் போது வெறுப்பாக இருந்தது.

அவன் உள்ளே தூங்கியிருந்த மிருகம் அந்த ராட்சத திரவத்தின் அட்டூழியம் தொடங்கியது. அவளுடைய ஆடைகளை வெறித்தனமாக கழற்றினான்.

வேண்டாம் ராஜ். எனக்கு களைப்பாக இருக்கிறது என்றாள் அவள்.

கமான். கமான். என்று கட்டாயமாக அவள் உடலில் ஊடுருவினான்.

அவளை துவம்சம் செய்தான். பிறகு அடங்கி உறங்கிப்போனான்.

எத்தனை நேரம் அவள் அழுதிருப்பாள் என்று அவளுக்கே தெரியாது. அவள் இன்று கற்பழிக்கப்பட்டாள். தான் நேசித்த பைத்தியமாக விரும்பிய காதலித்த ராமன் இன்று ராவணன் ஆகிவிட்டான்.

காலையில் எழுந்ததும் அவள் அங்கங்கள் வலிப்பதை உணர்ந்தாள். உதடுகளை கடித்திருந்தது அந்த மிருகம். குளித்து புடவை உடுத்தி அலமாரிக்கு வந்தாள்.

பல நாள் திறக்காத கதவுகள். தூசி படிந்த விளக்குகள். அனைத்தையும் சுத்தம் செய்தாள்.

எழுந்து குளித்துவிட்டு ராஜ் படபடவென்று பாட்டில்களை எடுத்து தூக்கியெறிந்தான். சிகரெட்துண்டுகளை அகற்றிவிட்டு குளித்து முடித்து இறைவன் முன் நின்று பிராத்தித்தான்.

பிறகு சிலியாவை பின்புறமாக வந்து கட்டியணைத்தான்.

உன்னை எவ்வளவு மிஸ் பண்ணேன்னு தெரியுமா என்றான் கொஞ்சலாக.

எதுக்கு?

கல்யாணத்துக்கான ஏற்பாடு செய்யத்தான்.

யார் கல்யாணத்துக்கு?

நம்ம கல்யாணம்தான் டியர். இது என்ன கேள்வி?

ராஜ் நான் கொஞ்சம் பேசனும். என் மேலேர்ந்து கையை எடுக்கறியா?

விலகி குழப்பத்துடன் எதிரே சென்று அமர்ந்தான்.

ராஜ் ஐ திங் எவ்ரி திங் இஸ் ஓவர் என்றாள் மெதுவாக.

வாட்? என்ன சொல்ற சிலியா?

ஆமாம் ராஜ். நேத்து நீ என்னுடைய விருப்பம் இல்லாம என்னை கெடுத்துட்டே.

என்ன சொல்ற சிலியா? நமக்கு கல்யாணம் ஆகப்போகுது. ஐ லவ் யூ டார்லிங்.

குடிக்க வேற ஆரம்பிச்சிட்டே.

நீ வந்தவுடனே விட்டுட முடிவு செஞ்சிட்டேன் பா.

இல்லை ராஜ். நான் வெறித்தனமா காதலிச்ச ராமன் நீ இல்லை. உன்கிட்ட ராவணன் வந்திட்டான். நான் கடந்த 7 மாசமா தவம் இருந்தது ராமனுக்காக. உனக்காக நான் எல்லாத்தையும் விட்டேன். ஐயங்கார் பொண்ணு என்னவெல்லாம் பண்ணுவாளோ அதெல்லாம் கத்துகிட்டேன். நான் கிழக்கே போய் இந்தியனா வந்திருக்கேன். ஏன்னா எனக்கு இந்திய கணவன் தான் வேண்டும்.

ஆனா நீ அமெரிக்கனாயிட்டே. அமெரிக்கனை கல்யாணம் செய்துக்க நான் இவ்வளுவு கஷ்ட பட்டிருக்கத் தேவையில்லை. நான் மேற்கில் இருந்தேன். உனக்காக கிழக்கு நோக்கி வந்தேன். நான் கிழக்கே

போனேன். நீ மேற்கே போனாய். நாம் இருவரும் எப்படி சேருவது?

சிலியா. என்னை புரிந்துக்கொள். நீ இல்லாம நான் பைத்தியமாயிட்டேன். அதனால தான் இதெல்லாம் நடந்தது. நீ வந்திட்ட பிறகு நான் இதையெல்லாம் தொடக்கூட மாட்டேன். ப்ளீஸ் சிலியா எனக்கு ஒரு வாய்ப்பு கொடு.

ராஜ் என்னை மன்னிச்சிடு. நீ ஒரு அவதாரப்புருஷன் எனக்கு. நீ தான் என்னோடு ராமன். நான் உன்னோட சீதா. அவதாரப்புருஷன் தப்பு செய்யக்கூடாது.

நான் நேற்று கன்னித்தன்மையை மட்டும் இல்லை உன்னையும் இழந்திட்டேன்.

மாமா மாமிக்கு என்னுடைய நமஸ்காரங்கள். இந்த சிந்து எப்பவுமே உங்க வீட்டுக்கு வரமாட்டான்னு சொல்லிடு.

அவள் தன் துணிமணிகளை எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

தூரத்தில் அவள் புள்ளியாகும் வரை பார்த்துக் கொண்டிருந்தான். அலமாரியிடம் சென்று மண்டியிட்டான். அழுதான்.

*I can derive whatever pleasure I want without these external influences*

என்றோ டைரியில் எழுதியது நினைவுக்கு வந்தது.

செல்லியம்மனை பார்த்து அம்மா உன் பிள்ளையை மன்னிக்கமாட்டாயா என்று புலம்பினான்.

சிந்து போயேவிட்டாள்.

செல்லியம்மனிடம் பிரார்த்தனை செய்தும் நிறைவேறாத ஒரு சில பிரார்த்தனைகளில் இதுவும் ஒன்று.

விவேகானந்தர் உள்ளே வந்தார். ஆஞ்சநேயர் அவன் கண்களை துடைத்தார்.

ஆனால் செல்லியம்மன் சிலையாகிவிட்டாள்.

முற்றும்

## மோகனின் மற்ற படைப்புகள்

1. மேற்கே செல்லும் விமானம் – காதல் காவியம்
2. கடைசி பேட்டி – மர்மக் கதை
3. ஞானி – தத்துவ கதை தொகுப்பு

## இணைய தளங்கள்

1. http://www.etheni.com
2. http://www.leomohan.net
3. http://Tamilamudhu.blogspot.com
4. http://Leomohan.blogspot.com

## மற்ற தமிழ் இணைய தளங்கள்

1. http://www.muthamilmantram.com
2. http://www.tamilmantram.com
3. http://www.unarvukal.com
4. http://www.tamilnadutalk.com
5. http://www.yarl.com/forum3
6. http://www.tamizmanam.com
7. http://www.thenkoodu.com